# அலை ஓசை

சமய-சமூக இலக்கிய சஞ்சிகை

ஐப்பசி - மார்கழி 2017
ISSN 2513 -2547

## கல்விச் சிறப்பிதழ்





படி....

50/-



"ஞானிகளுக்கு அறிவுரை கூறு : அவர்களுக்கு ஞானம் வளரும் : நேர்மையாளருக்கு கற்றுக்கொடு அவர்களது அறிவு பெருகும்"

I திமொ 9:9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலை ஓசை

சமய-சமூக இலக்கிய சஞ்சிகை

அலை 02 ஓசை 04

ஐப்பசி – மார்கழி 2017

ஆசிரியர் :
அருட்தந்தை றொஹான் பேர்னாட்

இணைஆசிரியர்:
கிறிஸ்டி முருகுப்பிள்ளை

ஆசிரியர் குழு:
சூசை எட்வேட்
செ.ஞானராசா
சுரேந்தினி மணிவண்ணன்

ஆலோசகர்:
அருட்தந்தை ஏ.ஏ. நவரெத்தினம்

கணனி எழுத்துருவாக்கம்:
நிவேதா மகிழ்ராஜ்

கணனி வடிவமைப்பு:
ச.பிரதீபா

வெளியீடு:
அலைஓசை கலைத் தொடர்பகம்
திருகோணமலை மறை மாவட்டம்

முகவரி:
அலைஓசை கலைத்தொடர்பகம்
இல.17, புனித அந்தோனியார் வீதி
திருகோணமலை
mail: trincoalaiosai@gmail.com

பதிப்பகம்:
ரிங்கோ பிறிண்டர்ஸ்
157, திருஞானசம்பந்தர் வீதி,
திருகோணமலை
0703555740 – 0262227866

**விலை ரூபா 50.00**

**ஆண்டுச் சந்தா – ரூபா 300.00**
**(தபாற்செலவு உட்பட)**

| | |
|---|---|
| ஆசிரியர் ஓசை | ..... 01 |
| ஆசிரியர் தினம் | .... 02 |
| கவிதை | .... 05 |
| தொங்கோட்டங்கள் (சிறுகதை) | ..... 06 |
| கவிதைகள் | ..... 10 |
| சவால் நிறைந்த கல்வி | ..... 11 |
| இலக்கிய ஓசை | ..... 13 |
| மாணவர் தற்கொலை ஒரு பார்வை | ..... 16 |
| மறைக்கல்வியின் அவசியம் | ..... 20 |
| விவிலியம் பற்றிய அடிப்படை | ..... 22 |
| அமெரிக்க கல்வி முறை | ..... 24 |
| அரசியல் ஓர் அலசல் | ..... 26 |
| அருட்தந்தையரை அறிவோமா | ..... 28 |
| கவிதை | ..... 30 |
| திருஅவைச் செய்திகள் | ..... 31 |
| மதிப்பெண்ணா? மனிதநேயமா? | ..... 32 |
| மறைமாவட்டச் செய்திகள் | ..... 34 |

ஆக்கங்களுக்குப் பொறுப்பு படைப்பாளிகளே – ஆசிரியர்

ALAI OSAI CULTURAL CENTRE
NO.17, ST ANTONY STREET,
TRINCOMALEE.
026 222 0077

அடுத்த அலை ஓசை
இதழுக்கு ஆக்கங்களை 2017 மார்கழி 15ற்கு முன்
அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிரியர் ஓசை

**"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல், பின்னருள்ள கருமங்கள் யாவும் பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல், அன்னயாயினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என பாடியுள்ளார் பாட்டுக்கொரு புலவன் பாரதி.**

இதற்கமைவாக கல்வியினால் மனிதன் அறிவைப் பெறுகின்றான், பண்பையும் ஒழுக்கத்தையும் வளர்த்துக் கொள்கிறான். கல்வியினால் மனிதன் ஆற்றலைப் பெறுகிறான். இன்றைய அறிவியல் யுகத்தில் மனிதன் கல்வியினால் நமது கற்பனை எல்லைகளையும் தாண்டி எங்கேயோ சென்று கொண்டிருக்கிறான். கல்வியின் அடிப்படை நோக்கமே அனைத்து மானிடரையும் எழுத, வாசிக்க வைப்பது என்பதனை அனைவரும் உணர்ந்து சிறப்பாக கல்வியியலாளர்கள் கல்வி புகட்டுவதை குறிப்பாக அடிப்படைக் கல்வி வசதியற்றவர்களுக்கு வழங்குவதை சேவையாக செய்ய முன்வர வேண்டும். தங்கள் கரங்களில் தவளும் "அலை ஒசை" சஞ்சிகை கல்விச் சிறப்பிதழாக மலர்ந்திருக்கின்றாள். மிக ஆழமான கருத்தாழமிக்க ஆக்கங்களை உள்ளடக்கி-யதாக உள்ளது. ஆக்கங்களை உரிய நேரத்தில் வழங்கிய படைப்பாளிகளுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். ஐப்பசி 5ம் திகதி உலக ஆசிரியர் தினமாகும். கல்விக்கு, கற்றலுக்கு மிகச்சிறப்பான பொறுப்பான இடத்தை வழங்க வேண்டுமென்று வலியுறுத்துகின்ற வேளையில், மாபெரும் கல்விச் சேவையை ஆற்றும் ஆசான்கள் கனம் பண்ண வேண்டியவர்களே. எமது ஆண்டவர் இயேசுவை எடுத்துக் கொண்டாலும் அனைத்து நற்செய்திகளிலும் இயேசுவை ஒரு நல்ல ஆசிரியராக போதகராக, கல்வியியலாளர்களை குறிப்பிடுகின்றன. "பெரும் திரளான மக்களை இயேசு கண்டார். அவர்கள் ஆயன் இல்லா ஆடுகளைப் போல் இருந்ததால் அவர்கள் மேல் பரிவு கொண்டு அவர்களுக்கு பலவற்றைக் கற்பித்தார்". என்னும் கூற்றினூடாக மாற்கு நற்செய்தியாளர் (6:34) இயேசு போதகர் என்பதையும் அவர் என்ன கற்பித்தார் என்பதையும் சுட்டிக்காட்டுகிறார் எனலாம்.

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவார்" என்ற முது மொழிக்கேற்ப இறைவனைப் போன்று இழுக்கற்ற வாழ்வே ஆசிரியர் கற்பிக்க வேண்டிய வாழ்க்கைப் பாடமாகும். இயேசு பிரான் இதனை செவ்வனே செய்து காட்டினார் (லூக் : 7:13). இது மாத்திரமல்லாமல் அவரது கற்பிக்கும் முறைகளில் பின்வரும் வகைகளைக் கடைப்பிடித்தார். அதாவது உவமைகள் (லூக்: 10:25-37) மூதுரைகள், பழமொழிகள் (யோ: 3:8), அருங்குறிச் செயல்கள் (லூக்5:1-11), முன்னைய படிப்பினை மேற்கோள்கள் (மத்11:21-24, தொ.நூ: 18:19), அன்றாட வாழ்க்கை அனுபவங்கள் (மாற் 1: 16-20), ஈடுபாட்டு இலக்கியப்பாணி (மத் 19:24), முரண்பாட்டு வழி உண்மை பயிற்றுவித்தல் (மத்: 16:25), கேள்விகள் வழிச் சிந்திக்க வைத்தல் (லூக் 6: 9) ஒற்றுமை காட்டி உணர்த்துதல் (லூ 18: 1-8), நகைச்சுவை வழி கற்பித்தல் (மத்7 : 3-5) போன்ற வழிமுறைகளாகும். ஆதலால் தான் இயேசுவின் படிப்பினைகள் எம் மனங்களில் பசுமரத்து ஆணி போன்று பதிந்து கிடக்கின்றன. இப்பேற்பட்ட வழிமுறைகளை தற்போதைய ஆசிரியர் பெரு-மக்களும் கடைப்பிடித்தால் மாணவர்கள் ஆர்வமாக கற்கவும் அதே வேளையில் ஆசிரியர் மீதும் மாணவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் வளரும். மாணவி வித்தியாவும், தான் ஓர் ஊடகவியலாளராக வரவேண்டும் என்ற கனவோடே கற்று வந்தாள். வித்தியாவிற்கு என்ன நடந்தது என்பதை இந்த உலகமே அறியும். இந்தப் பேதைப் பெண்ணை சிதைத்த அநியாயக்காரர்களுக்கு கிடைத்த மரணதண்டனைத் தீர்ப்பையும் இந்த உலகம் அறியும். யார் அறிந்தாலென்ன வித்தியா இல்லையே! இனி மேலும் இந்த நாட்டில் வித்தியாக்கள் சிதைக்கப்படக் கூடாது இருக்க எல்லோரும் கிளர்ந்தெழுந்து விழிப்பாயிருக்க வேண்டும். அதாவது எமது கல்வி, மறைக்கல்வி மாணவர்களை சிறந்த அறிவாளிக-ளாகவும், மனித நேயம் மிக்கவர்களாகவும் வளர்த்-தெடுக்க வேண்டும். அதேவேளை காருண்யத்தை போதிக்கும் புத்தபெருமான் வழி புத்த பிக்குகள் சிலர் ரோகிங்கியா ஏதிலிகளுக்கு எதிராக போர் கொடி தூக்குவதை அறியும் போது நெஞ்சம் வெடிக்கிறது. ரோகிங்கியா ஏதிலிகள் முஸ்லீம்களாக இருப்பினும் அவர்களும் மனிதர்களே! வாழப் பிறந்தவர்களே.

**மனித நேயம் மிக்க மனிதர்களை உருவாக்கும் கல்விக்கு ஆதரவு வழங்குவோம்.**



**-ஆசிரியர்-**

**நீதி மொழிகள்:** அறிவை விரும்புவோர் கண்டித்து திருத்தப்படுவதை விரும்புவர் : கண்டிக்கப்படுவதை வெறுப்போர் அறிவற்ற விலங்குகள் ஆவர் நீ.மொ. 12:12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச ஆசிரியர் தினமும், ஆசிரியம் எனும் புனிதப்பணியும்



அருட்பணி அ. நவரெத்தினம்
முதுநிலை விரிவுரையாளர்,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.






### ஆசிரியம் – நீடூழி வாழ்க

"எழுத்தறித்தவன் இறைவன்" என ஆசிரியப் பெருமக்களே உங்களை வாழ்த்தி, வணங்கி, சர்வதேச ஆசிரியர் தின நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் (சிலவேளைகளில் "அலை ஓசை" யின் இவ்விதழ் தங்கள் கரம் கிடைக்கின்ற வேளையில் சர்வதேச ஆசிரியர் தின விழா நிறைவுற்றிருக்கலாம். எது எப்படியிருப்பினும் எல்லா நாளிலும் ஆசிரியர்கள் நினைக்கப்பட வேண்டியவர்களே).

அக்டோபர் 5ம் நாள் சர்வதேச ஆசிரியர் தினமாக ஐக்கிய நாடுகளின் யுனெஸ்கோ அமைப்பில் 1994ம் ஆண்டு பிரகடனப் படுத்தப்பட்டு உலகம் முழுவதும் (இந்தியாவில் பெருமைமிகு கல்வியலாளரும், பெரு மதிப்பு மிக்க நல்லாசானுமாகிய டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணனின் நினைவு நாளாகிய செப்டம்பர் 5ம் நாள்) ஆண்டு தோறும் கொண்டாடப்படுகின்றது.

அந்நாளில் மாணவச் செல்வங்கள் தங்களது ஆசான்கள்மீது கொண்டுள்ள அன்பையும், பாசத்தையும், உயரிய சிந்தனையையும், மதிப்பையும், மரியாதையையும் பல்வேறு வடிவங்களில் தங்கள் நன்றியாக வெளிப்படுத்துகின்றார்கள். அவற்றுள் சில: மலர் மாலைகள் அணிவித்தல், பூச்செண்டுகள் வழங்குதல், அன்பளிப்புக்கள் பகிர்தல், பாதங்களைத் தொட்டு வணங்குதல், சிறப்புரைகள், கவிதைகள், பாடல்கள், நடனங்களென பல்வேறுபட்ட வெளிப்பாடுகள் என்று அந் நாளையே அமர்க்களப்படுத்தி விடுகின்றார்கள்.

### ஆசிரியம் – நிகரில்லாப்பணி

ஏன் இதனை உங்கள் மாணவச் செல்வங்கள் உங்களுக்கு செய்கின்றார்கள் என்று என்றாவது சிந்தித்துப் பார்த்ததுண்டா? அவர்கள் இதனை செய்வதற்கான நோக்கம் ஓர் அமெரிக்க வாக்கியம் கூறுவதுபோல: "உன்னால் இதனை வாசிக்க முடிந்தால் ஓர் ஆசிரியருக்கு நன்றி செலுத்து" (American Proverb: 'If you can read this; thank a teacher') என்பதாகும்.

அவ்வாறு சொல்வதற்கான காரணம் "ஆசிரியப் பணி மாத்திரமே ஏனைய தொழிற் துறைகளுக்கு விற்பன்னர்களை உருவாக்கித் தரமுடியும்" (Teaching is the one profession that creates all other professions).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே ஆசிரியர்களே! நம்புங்கள்... உங்களால் மட்டும் தான் இது சாத்தியமாகும், முடியும். உங்களது மாணவர்களுக்கு 'நீங்கள் அவர்களை அன்பு செய்கின்றீர்கள் என்று உணரும்போது, உங்களுக்கு எவ்வளவு தெரியும் என்கின்ற கவலையே அவர்களுக்கு ஏற்படுவது கிடையாது'.

**ஆசிரியம் என்றும் மறக்கப்படுவதில்லை**

எனவே, எவ்வளவு பேர் ஆசிரியப் பணியில் இணைக்கப்பட்டாலும் எல்லோருமே மாணவச் செல்வங்களின் மனங்கவர் ஆசான்களாக மாறிவிட முடியாதென்பது கசப்பான உண்மையாகும். இன்று பல்வேறு தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ள உங்களது மாணவச் செல்வங்களாகிய பழைய மாணவர்கட்கு அவர்களது பாடசாலை நாட்கள் என்றவுடன் மனக்கண்முன் வரும் ஆசிரியர்களை விரல்விட்டு எண்ணி விடலாம். அதற்கான அடிப்படைக் காரணம் அவர்கள் அவர்களுள் நிறைந்து விட்டார்கள். (இந்த இடத்தில் சற்று தரித்து நின்று நம்மையே சுய ஆய்வு செய்து கொள்வோம். நம் வாழ்வினைத் தொட்ட ஆசான்கள் யாவர்? அவர்கள் அவ்வாறு நம்மைத் தொட்டமைக்கான காரணங்கள் யாவை? அவர்களுக்கு நன்றி கூறுவோம். அவர்களுள் ஒருவராக நாம் மாற என்ன செய்ய வேண்டும்? சிந்திப்போம், செயல்படுவோம்). அவ்வாறு உங்களது மாணவர்களின் மனங்களில் நிறைந்தவர்களாக நீங்கள் மாறவேண்டும் என்பதுதான் அனைவரதும் விருப்பமாகும். வில்லியம் ஆர்தர் வோட் என்கின்ற அறிஞர் கூறுகையில்: 'சாதாரண ஆசிரியர் கற்பிக்கின்றார், நல்ல ஆசிரியர் புரிய வைக்கின்றார், சிறந்த ஆசிரியர் செயல்வழி காட்டுகின்றார், மேன்மையான ஆசிரியர் மாணவர்களின் தூண்டுதலாக, உந்துசக்தியாக மாறுகின்றார்'.

**ஆசிரியம் – கரம்கோர்த்து நடத்தல்**

ஒரு நல்லாசானின் பணியினைக்குறித்து ஜெர்மனிய தேசத்து விஞ்ஞானி அல்பர்ட் ஐன்ஸ்டைன் குறிப்பிடுகையில், 'நான் எனது மாணவர்களுக்கு கற்பிப்பது கிடையாது மாறாக, அவர்கள் கற்பதற்கான சூழலை மட்டும் ஏற்படுத்திக் கொடுப்பேன்'. அவரே கூறுகின்றார்: 'ஒரு சிக்கலை / பிரச்சனையை என்னிடம் ஒப்படைத்து ஒரு மணி நேரத்தில் தீர்க்கச் சொன்னால், ஐந்து நிமிடங்கள் மாத்திரமே தீர்வுக்கு செலவிடுவேன், மீதி 55 நிமிடங்களை அச்சிக்கல் அல்லது பிரச்சனை என்னவென்று வரையறை செய்ய செலவிடுவேன்' என்கிறார்.

எவ்வளவு ஆழமான உண்மையாகும். எந்தவொரு வினாவுக்கும் தீர்வு அல்லது விடையளிக்க முன்பு, வினா என்னவென்று சரியாக புரிந்து கொள்ள வேண்டும்.

அப்போதுதான் நாம் அளிக்கும் விடை சரியானதாகவும், கேட்கப்பட்ட வினாவுக்கு பொருத்தமானதாகவும் இருக்கும்.

எனவே அவரது கூற்றின் பிரகாரம் நாம் எமது மாணவர்களுக்கு வழங்கக்கூடிய மிகச்சிறந்த கற்றல் சூழல் அல்லது வாய்ப்பு, அவர்கள் தங்களது கற்றலை மேற்கொள்வதற்கான பொறுப்புணர்ச்சியினை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கும்.

கேள்விகளுக்கான விடைகளை மாணவர்கள் தாங்களாக கண்டு பிடிக்கும்போது அல்லது அது இல்லாதவிடத்து அதனை அவர்கள் புதிதாக உருவாக்கும் போது அவர்களிடம் ஏற்படுகின்ற மாற்றத்திற்கு அளவே கிடையாது. எனவே நல்லாசான்களே! நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் மாணவச் செல்வங்களின் கற்றலுக்கான சூழலை அல்லது வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்தலேயாகும்.

**ஆசிரியம் – மாற்றத்தை கொணர்வது**

நம்மில் பெரும்பாலானோருக்கு மலாலா யூசுப்சாயை தெரியும். இவர் பாகிஸ்தான் நாட்டிலுள்ள சுவாட் பள்ளத்தாக்கில் வாழ்ந்து வந்த மாணவி. அங்கு நிலவுகின்ற அசாதாரண சூழ்நிலையிலும் மாணவர்களின் கல்விக்காக, நலனுக்காக போராடியவர். இன்றும் தொடர்ச்சியாக போராடிக் கொண்டிருப்பவர். இவரின் இந்நற்செயலுக்காக சுடப்பட்டார், ஆயினும் தெய்வாதீனமாக காயங்களுடன் உயிர் தப்பினார். இன்று பிரித்தானியாவில் கல்வி கற்று வருகின்றார். இவர் தனது மாணவர் நலப் பணிக்காக 2014ம் ஆண்டின் நோபிள் சமாதானப் பரிசளித்து கௌரவிக்கப்பட்டவர். இவர் கூறுகின்றார்: 'ஒரு மாணவர், ஓர் ஆசிரியர், ஒரு புத்தகம், ஒரு பேனா இந்த உலகினை மாற்றிட முடியும்' (One child, one teacher, one book, one pen can change the world" – Malala Yousafzai). அவரது கருத்தின் பிரகாரம், உலகில் நேர்மறை (Positive) மாற்றத்தை கொணரக் கூடியவர்கள் ஆசிரியர்களே. எனவே ஆசிரியர்களே, உங்களது முயற்சிகள் வெற்றியை, மாற்றத்தை கொண்டு வராது என்கின்ற தப்பபிப்பிராயம் கொள்ளாதீர்கள். மேலும், அத்தகைய தாழ்வு மனப்பான்மையை உங்களிடமிருந்து தூர விரட்டி விடுங்கள். உங்கள் நேர்மறை தாக்கம் உங்கள் மாணவச் செல்வங்களில் எப்போதும் இருக்கப் பார்த்துக் கொள்ளுங்கள். உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர்கள் குறித்து தீராத பற்றும், துணிவும் கொண்டிருங்கள், ஏனெனில் அவர்கள் எல்லோரும் சாதிக்கப் பிறந்தவர்கள். ஒருபோதும் அவர்களைக் குறித்து பின்வாங்கி விடாதீர்கள்.

**ஆசிரியம் – நல்லாசானவது**

ஆசிரியப் பணியென்பது ஒரு சிற்பியின் பணியினையொத்தது. சிற்பி தன் கையிலுள்ள உளியினைக்கொண்டு உருவமே தெரியாத கல்லில் தேவையற்றவைகளை அகற்றுவதன் வாயிலாக அழகான சிற்பத்தை உலகிற்கு பரிசாகக் கொடுக்கின்றான். அவ்வாறுதான் உங்கள் பணியினூடாக உங்களிடம் தரப்பட்ட மாணவச் செல்வங்களிடம் உள்ள தேவையற்றவைகளை அகற்றி விடுங்கள், அப்போது நீங்களே ஓர் அழகுச் சிற்பத்தைக் கண்டு அதிசயித்துப் போவீர்கள். எனவே அன்பு ஆசான்களே, உங்களிடம் தரப்பட்டவர்கள் எல்லாம் இறைவனின் அழகோவியங்கள் என்பதனை ஒருபோதும் மறந்து விடாதீர்கள். அவர்களை சமமாக அன்பு செய்யக் கற்றுக் கொள்வோம். அவர்களுக்கிடையே பாகுபாடுகளையும், பிரிவினையையும் வளர்க்கக்கூடிய செயல்களை வகுப்பறையிலிருந்து தூர விலக்கி விடுவோம். நம்மிடம் தரப்பட்ட எல்லாச் செல்வங்களுக்காகவும் நேரத்தை கொடுப்போம். அதிலும் குறிப்பாக, அதிக கவனம் தேவைப்படுவோருக்கு சிறப்பு அக்கறை காண்பிப்போம். மறைந்த கவிஞர் வாலியின் வார்த்தைகள்: "எந்த வியர்வைக்கும் வெற்றி ஒருநாள் வேர் வைக்கும்" என்பதனை மனதாரக் காதலிப்போம். நமது வியர்வையினைச் சிந்தி, நமது வருங்காலங்களை வாழ வைப்போம். மனித வரலாறு பல நூறு நல்லாசான்களைக் கண்டுள்ளது. அந்தப்பலருள் ஒருவனாக நான், நீ, நீங்கள் மாறிட முயற்சிப்போம்.

**இயேசு கிறிஸ்து எனும் நல்லாசானின் வழியில் புதியதொரு கேள்விப் பயணம் தொடர நல்லாசான்களே வாருங்கள். பணி சிறக்க வாழ்த்துக்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சி. மகேந்திரராஜா
ஓய்வு நிலை கலாசார உத்தியோகத்தர்

# கல்வி




அன்னை மடியில் உதிப்பது கல்வி
அடுத்துத் தொடர்வது பாடசாலையிலே
கல்வி என்பது கற்பதனாலே
கனிந்து வந்திடும் தேன்கனி போல
கறுப்போ, சிவப்போ நிறம் கிடையாது
காவியம் அனைத்தும் அதன் வழிதானே
சேரும் யோகம் செல்வம் அனைத்தும்
சேர்த்தே வைப்பது சிறந்த கல்வியே

செல்லும் இடத்தில் சீரும் சிறப்பும்
பட்டம் பதவி பல பெரும் பணிகள்
பாரோர் போற்றும் பல புகழாரம்
தேடா மனிதனைச் தேடச் செய்திடும்
தேச சஞ்சாரம் செய்யவும் வைத்திடும்
திரவியம் தேடும் திறனைத் தந்திடும்
திவ்வியமான கல்வி தான் பாரீர்

பாட்டும் பரதமும் நேர்த்தியாய் தோன்ற
பாரில் பாவேந்தர் பாமாலை சூட
வேத வாக்கியம் விளங்கி ஒலிக்க
வேத நெறியொடு வழிபாடோங்க
மக்கள் கூட்டம் மனங்குன்றாமலே
மாந்தர் குழாம் மகிழ்ச்சியோடிருக்க
அனைத்து விடயமும் அழகுறக் காண
ஆதாரமாவது சீர் பெறு கல்வியே
கல் என்பது கலை என்பர் கல்வி என்பர்
கலைகள் அறுபத்து நான்கிற்கு மேல் என்பர்
இத்தனை கலையும் எழிலுடன் தோன்ற
சந்த பந்தம் தவறா வண்ணம்
சங்கதி சரணம் சகலதும் சேர

ஆடல் அபிநயம் அழகாய்க் காண
பல்துறை சார்ந்த பயன்கள் யாவும்
பயனுள்ள கல்வியின் பயன்பாடன்றோ

சட்டம் ஒழுங்கு சம்பிரதாயம்
சமூகம் தன்னில் நிலை பெற்றிலங்க
சார்ந்து வரும் சோதனை யெல்லாம்
சதியை மதியால் வெல்வது போல
மானிட நேயம் மறையாதிருக்க
மதிக்கு நுட்பம் சேர்த்து வைப்பது
வழி, வழி வந்த வாசனை கலந்த
வளம் குன்றா வளர்மதி கல்வியே

காலம் சொல்லும் வரலாற்றோடு
காணும் கலைக் கோலங்களை
கால முகக் கண்ணாடி ஆக்கி
காட்சி தருவது கல்வியின் திறனே
உலக நவீன ஓட்டம் தனை
ஊன்று கோலாய்த் தாங்கி நின்று
உன்னத நிலை பெற ஊக்கம் கொடுத்து
உயர்த்தி விடுவது உயர்நிலைக் கல்வியே

சோதிடம் சாஸ்திரம் சுப மூகூர்த்தம்
சொல்லிக் கொடுப்பது சுதந்திரக் கல்வி
நன் நடை முறையை நாள்தோறும் பேண
நல்வழி காட்டி நிற்பது கல்வி

கடலில் மூழ்கி கரை சேர்ந்திடலாம்
கன அடி ஆழம் கண்டறிந்திடலாம்
கல்வியில் மூழ்கி கரை சேர்வதை
கனவில் கூட காண்பது அரிது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொங்கோட்டங்கள்...



கிறிஸ்டி முருகுப்பிள்ளை

நான் நீண்ட நேரமாகக் காத்திருக்கிறேன் .... ஐயா இன்னும் வரவில்லை !

பல தடவைகள் ஐயாவின் தனிப்பட்ட முகாமைத்துவ உதவியாளரான றீற்றா 'மெடத்திடம்' கேட்டு விட்டேன் ....

“சேர் எப்பதான் வருவார் மெடம்.... ?”

“சேர் வாற நேரம் தான் வருவார்.... எத்தன தடவைகள் தான் சொல்வது.... போய் இருங்க...”

இனி இவவிடம் கேட்க முடியாது ....

மரியாதை போய் விடும் .

ஐம்பது பேருக்கு மேற்பட்டவர்கள் அந்த அலுவலகத்தில் ஐயாவைச் சந்திக்க காலையிலிருந்தே என்னுடன் அல்லாடிக் கொண்டிருக்கின்றனர் .... ஐயா எப்போ வருவார் .... இன்றைக்காவது அவரைச்சந்தித்து எனது மனைவியின் இடமாற்றம் பற்றிக் கதைத்துவிட வேண்டும்.

அதிகாலை மூன்று மணிக்கு 'அலாரம்' வைத்து எழும்பி அவசரமவசரமாக புறப்பட்டு மனைவி தன் இயலாமையிலும் என்னோடு எழுந்து போட்டுத்தந்த கோப்பியைக் குடித்தவாறே “இன்றைக்கு எப்பிடியும் சேரைச் சந்தித்து விடுவேன் சாந்தி .... கெஞ்சி மன்றாடியாவது உனது இடமாற்றத்தைச் செய்து விட வேண்டும் .... சரி சரி ... நீங்க போய் படுங்க ....நான் போயிற்று வாறன் ஆ....”

ஒழுங்கையால் நடந்து பிரதான வீதியில் ஏறினேன்... 'டோர்ச்'சை அடித்து நேரத்தைப் பார்த்தேன் .... மூன்று நாற்பது.

இனி பஸ் வந்து விடும் ...

அக்கரைப் பற்றிலிருந்து நாலரை பஸ்ஸைப் பிடிக்க வேண்டும்.

ஒன்பதரை மணிக்கு 'ஒப்பீசு' க்குச் செல்வதென்றால் எப்படியும் இந்த பஸ்ஸைப் பிடித்தாக வேண்டும் .

ஆ... பஸ் வந்து விட்டது !

பஸ்ஸில் ஏறி சரியாக நாலரைக்கு அக்கரைப்பற்றை வந்தடைந்தேன் .... பஸ் ரெடியாக இருந்தது . பஸ் நிலையத்தைச் சுற்றிப் பார்த்தேன் ... ஒரே ஒரு ஹொட்டேல் திறந்திருந்தது ... ஓடிச் சென்று 'மலிபன்' இஞ்சி பிஸ்கட் பக்கற்றொன்றை வாங்கிக் கொண்டு பஸ்ஸில் ஏறினேன்... பஸ் புறப்பட்டது ...

நான் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்கின்றேன். மனைவி கடந்த எட்டு வருடங்களாக கஷ்டப் பிரதேச பாடசாலையொன்றில் ஆசிரியையாகப் பணிபுரிகின்றாள். எமது இரண்டாவது பிள்ளை ஏழு மாதங்களிலேயே பிறந்து விட்டது. சிசேரியன் பிரசவம் தான். பிள்ளை சரியாக வளர்ச்சியடையாததால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிற்கு கொண்டு செல்ல டாக்டர்கள் மறுத்து விட்டனர்.

"மூன்று மாதங்கள் எங்கள் பராமரிப்பிலேயே இருக்கட்டும்... சரியான வளர்ச்சி பெற்றதும் கொண்டு போகலாம்..." என்று உறுதியாகவே சொல்லி விட்டனர்.

தினமும் வைத்திய சாலைக்குச் சென்று பிள்ளையைப் பார்க்க வேண்டும். ஆறுமாத கால பிரசவ லீவும் முடிவடையும் தறுவாயிலுள்ள போது தான் பிள்ளையை தொடர்ந்தும் பராமரிக்க அருகிலேயே இருக்க வேண்டும் என்று கூறிவிட்டனர்...

அல்லது மேலும் ஆறு மாத கால அரைச்சம்பள லீவில் நிற்க வேண்டும்... அல்லது பக்கத்தில் உள்ள பாடசாலைக்கு ஆறுமாத கால தற்காலிக இணைப்பைப் பெற வேண்டும்.

பஸ்ஸிலிருந்து இறங்கி 'ஒப்பீசை' அடைந்தேன் 'விசாரணை' என லேபலிடப்பட்ட கூட்டினுள்ளிருந்த பிள்ளையிடம் ஒரு 'போம்' வாங்கி நிரப்பிக் கொடுத்தபோது ஒரு 'டோக்கனை' த் தந்தாள்.

பார்த்தேன் ... நாற்பத்தேழு...

கடவுளே ... இன்றைக்கு முடியுமா ...?

கடந்த மூன்று வாரங்களிலும் புதன்கிழமைகளில் வந்து 'டோக்கனை' வாங்கி ... காத்திருந்து... காத்திருந்து... ஐயா வராமலே ஏமாற்றமடைந்து ... ஐந்தரை மணிக்கு 'ஒப்பீஸ்' பூட்டப்படும் போது 'பியோண்' வந்து "சரி.... சரி.... திறப்பைப் பொலீஸில் கொடுக்க வேண்டும் பாருங்கோ.... ஐயா இண்டைக்கு வர மாட்டார் தூரப் போறாக்கள் பஸ்ஸைப் பிடிக்கிற வேலையைப் பாருங்கோ....!

தன் கடமையை முடிப்பதில் கருத்தாய் இருந்தான்.

மீண்டும் ஆறு மணிக்கு பஸ்ஸெடுத்து பதினொன்றுக்கு அக்கரைப்பற்று சென்றால் அதன் பிறகு எமதூருக்கு ஏது பஸ் ...? மூன்றரைக்கு கொழும்பிலிருந்து வரும் பஸ்ஸை எதிர்பார்த்து நைற் ஹொட்டலில் நான்கைந்து பிளேன்ரீயும் குடித்து பசி தீராமல் ஒரு கொத்து ரொட்டியும் சாப்பிட்டால் தான் வயிறு நிமிரும் .... நான்கு மணியாகும் வீடு செல்ல . ஹும்ம்ம் ... ஏசி பிக்கப்பில் பயணம் செய்து அதற்கும் தவறாமல் 'கிளைமும்' பெற்று கல்வி வளர்க்கும் உயர் அதிகாரிகளுக்கு எங்கள் துன்பமும்..... வேதனையும் ... வெதும்பல்களும் தெரியவா போகிறது...?

மீண்டும் அடுத்த வாரம் சென்றேன்....

இன்றைக்காவது ஐயாவைக் காட்டு கடவுளே! பக்கத்திலிருந்தவர் என்னைப்பார்த்து காதுக்குள் குசுகுசுத்தார் ... பிரச்சனைகளில்லாமல் நாங்கள் இங்க ஏன் வருகிறோம்... ஏதோ... பெரியவரிடம் எங்கள் குறைகளைக் கூறினால் தீர்வுகிடைக்கும் என்று தானே இவ்வளவு கஸ்டப்பட்டு வாறம்... புதன்கிழமை 'பப்ளிக்டே' என்று அரசாங்கமே சட்டம் போட்டுள்ளது ... ஆனால் இவர்கள் ...? மெல்லத் திரும்பி அவரை உற்றுப் பார்த்தேன் .... "ஒய்வு பெற்ற ஆசிரியரா ... அதிபரா நீங்கள்...?" இல்ல தம்பி ... ரிட்டயர்ட் டீ.டீ.ஈ என்ர பென்சன் பைல் இன்னும் பென்சன் பிறான்ச்க்குப் போகல்ல ... அவர்ர மேசையில தான் இருக்குதாம்.... நேரில கண்டு கதச்சி அனுப்பி விட வேணும்..."

"பைல அவர் சைன் பண்ணத்தானே வேணும்... அதுக்கு நீங்க ஏன் அலையணும்...?"

"தம்பிக்கு நிலம விளங்கல்லப் போல... அவர்ர கொன்பரன்ஸ் மேசை முழுவதும் பைல் தானே அடுக்கி கிடக்குது... ஒப்பீசுக்கு அவர் வந்தாத் தானே...? ஓடி ஓடி கல்வி வளர்க்கிறதா .....பைலில சைன் பண்ணுறதா...? அதற்குள் ஒப்பீஸ் பரபரப்பானது... அனைவரும் எழுந்து நின்றனர்.... ஒரு பிக்கப் ஒப்பீஸ் வாசலில் வந்து நின்றது. ஐயா தான் வந்து விட்டார் .

அப்பாடா... இன்றைக்கு விசயம் முடிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரித்தான்....
நின்றிருந்த எங்களைத் திரும்பியும் பாராமல் ஐயா அறைக்குள் நுழைந்தார்...
நேரத்தைப் பார்த்தேன் ....
மூன்றரை மணி !
அவரின் அறைக்குள் செல்ல அனைவரும் முண்டியடித்தனர்.
றீற்றா 'மெடம்' அதட்டிச் சத்தம் போட்டார். “எவரும் உள்ளே போகக் கூடாது... சேர் களைத்துப்போய் வந்துள்ளார்... அவர் கூப்பிடும் வரை இருங்கோ”
நாங்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம்.
ஐயா களைத்துப் போய் விட்டாரா...?
ஓங்கிக் கத்த வேண்டும் போலிருந்தது . நமது விடயத்தை வெல்ல வேண்டுமே... நாவை அடக்கிக் கொண்டேன்.
நேரம் நாலாகி விட்டது .
இதற்குப் பின் தனித் தனியாக அழைத்து விசாரித்து... முடிவெடுத்து... நாலே காலுக்கு ஒப்பீஸ் முடிவடைந்து விடுமே...?

றீற்றா மெடம் மீண்டும் “ஐம்பதாம் நம்பருக்குள்ள அனைவரையும் சேர் உள்ள வரட்டாம்”.
விறைத்துப் போனேன்... வியந்து போனேன்... ஐம்பது பேருக்கும் ஒரே நேரத்தில் தீர்வா...? என்ன நிர்வாகத் தந்திரம் ..... திறமை !
ஒவ்வொருவராக உள்ளே சென்றோம்.
றீற்றா மெடம்... “ஹலோ... ஹலோ... சூ.. சன்டில்ஸ் எல்லாம் கழற்றி விட்டுப் போங்கள் ... இந்த அறிவித்தலைப் பார்த்தீர்களா”
அப்போது தான் ஐயாவின் றூம் கதவை அவதானித்தேன்.
ஒரு படம்.. ஒரு ஷூவை மறுத்து ஒரு கோடு போடப்பட்டிருந்தது.
ஓஹோ.... சரிதான். ஷூவைக் கழற்றினேன்... கதவைத் தள்ளினேன்...
'சில்'லென்று குளிர் காற்று என் முகத்திலடித்தது. மூச்சை நீளமாக இழுத்து உள்வாங்கிக் கொண்டேன்.
ஹா.. சுகமாக இருந்தது .
எனது பார்வை அந்த அறையைச் சுற்றி நோட்டமிட்டது.
இரண்டு ஏசீ க்கள் அந்த அறையை குளிரால் உறைய வைத்துக் கொண்டு இருந்தன. அறையைச் சுற்றி வர நீல நிற 'கேட்டின்'.
நிலத்தில் 'கார்ப்பெற்' பஞ்சு மெத்தையாய் மெது மெது வென்றிருந்தது பகலிலும் நான்கு மின்குமிழ் ஒளியைப்பாய்ச்சிக் கொண்டிருந்தன ...
அரை வட்ட மேசை...
சுழலும் நாற்காலி...
ஷோபா செட் ... கொன்பரன்ஸ் மேசை... நீல நிறக் குசைன் கதிரைகள் ... மேசையில் அவரின் பெயர் பொன்னிற எழுத்தில் பெரிதாய் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது
வியந்து போய் நின்றேன்.
இப்படியுமா?
ஐம்பது பேரும் மிகவும் பணிவாக அவரின் வார்த்தைக்காக காத்திருந்தோம்.
ஐயா பேசத் தொடங்கினார் ...
“சரியான வேலைப்பழு... உங்கள் பிரச்சனைகளை அடுத்த கிழமை பார்க்கிறன் ... காலையிலே வந்து விடுங்க எட்டரை மணிக்கெல்லாம் நான் 'சீற்'றில இருப்பன்... சரியல்லோ ஓகே... றீற்றா அடுத்தவங்களைக் 'கோல்' பண்ணுங்கோ...”
சரியான தீர்வுதான்... அசந்து போனேன்... தலைகளைத் தொங்க விட்டபடி அனைவரும் முணு முணுத்தபடி வெளியேறினர். நான் சற்று ஒதுங்கி நின்றேன்... எப்படியும் ஐயாவிடம் கதைத்தாக வேண்டும்..
குனிந்து ஏதோ எழுதியவர்... நிமிர்ந்து... “நீங்க



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

போகல்லயா ... எங்க இருந்து வருகிறீர்கள்...?"
நான் கூறினேன் .
"ஓ... சரியான தூரம் தான்... சுருக்கமாகச் சொல்லுங்கள்.... என்ன பிரச்சனை...?"
அறையின் மூலையிலிருந்த நான் மெல்ல முன்னேறியபடி கடிதத்தை பிரித்து நீட்டினேன்.
'கடவுளே .. என் பிரச்சனை இன்றே தீர்ந்து விடும்'
கடிதத்தை வாங்கினார்.
"ம் ம் ... சொல்லுங்கள்..."
நானும் "சேர் எனது மனைவி ஒரு ரீச்சர்...."

"குட் ஈவினிங் டிரக்டர்"
திடீரென கதவைத் திறந்தபடி மூன்று ஆண் ஒப்பீசர்களும் இரண்டு பெண் ஒப்பீசர்களுமாக உள் நுழைந்தனர்.
நான் இரண்டடி கால்களைப் பின்
நகர்த்தினேன்.....
"வீ ஆர் கமிங் புறொம் புரொடக்ரிவிற்றி பிறான்ச் ...." (நாங்கள் உற்பத்தித்திறன் பிரிவிலிருந்து வருகிறோம்)
அவர்கள் தங்களை அறிமுகப் படுத்தினர். அதிலிருந்த லேடி ஒப்பீசர் தான் ஹெட் போலும் அவர் "அத்யக்ச துமா அத அபி மே பிரதேசயே பாசல் தெக்க அதீக்சணகரா... ஹொந்த மட்டமே பாசல் தெக்கம தியனவா... அபி ஹரி சந்தோசய" (பணிப்பாளரே இன்று நாங்கள் இப்பிரதேசத்திலுள்ள இரு பாடசாலைகளை மேற்பார்வை செய்தோம். அவை நல்ல நிலையிலுள்ளன. சந்தோசம்)
அப்போது தான் ஐயா அவர்களின் கால்களை கவனித்தார் ...
ஷுவுடனும்... சப்பலுடனும் நின்றிருந்தனர் "ஷு ... சப்பல் நிமுவ் பிளீஸ்..." சற்றுக் கடுப்புடன் தான் சொன்னார். வந்த ஒப்பீசர்களுக்கு 'சுருக்' கென்றது...
"மேக்க தேவாலயத.. பள்ளியத.. அத்யக்ஷகதுமா? (இது தேவாலயமா.. கோயிலா பணிப்பாளரே)
வந்த லேடி ஒப்பீசர் தைரியமாகவும்.... சற்றுக் கோபமாகவும் கேட்டார் .
"நோ... நோ... திஸ் இஸ் அவ ஒப்பீஸ் ரடிசன்..." (இது எங்கள் அலுவலக மரபு)
ஐயா சமாளித்தார்.
ஐயாவின் பதில் அவர்களின் கோபத்தை மேலும் தூண்டியது போலும் ...செல்லம் கரண்ட எப்பா.. ஒயாட்ட நெவேய் அப்பிட்ட தமாய் லஜ்ஜந. "டிரக்டர்... டோண்ட் பிளே வித் பீப்பிள்ஸ் மணி ... ஓகே... வீ வில் கோ..." (பணிப்பாளரே மக்கள் பணத்தில் விளையாட வேண்டாம் உங்களுக்கல்ல எங்களுக்கே வெட்கம் நாங்கள் போவோம் )
அனைவரும் வெளியே சென்றனர். அப்போது தான் நானும் உள்ளே நிற்பதை ஐயா கண்டார் ...
"நீர் இன்னும் போகல்லயா ..?
"இல்ல சேர் ... என் மனைவிர ரான்ஸ்பர்... நான் மென்மையாக இழுத்தேன்...
அவர் மிகுந்த கோபத்திலிருந்தார்... முகம் சிவந்துவிட்டது... நான் உள்ளே நின்றது மிகவும் அவமானமாக போய் விட்டது போலும் .
"இந்தாரும் உமது கடிதம்.... அடுத்த வீக் வாரும் ..."
அவசரமாக வெளியேறினார் .
நான் றூமை விட்டு வெளியேறுவதற்கிடையில் 'பிக்கப்' உறுமிக் கொண்டு புறப்பட்டது .

வெதும்பிய மனதுடனும் ஏமாற்றத்துடனும் எனது கையில் இருந்த கடிதத்தை குப்பைக் கூடைக்குள் கிழித்துப் போட்ட படி பெருமூச்சுடனும் ஒரு தீர்மானத்துடனும் வெளியே நடந்தேன்.

யாவும் கற்பனையே.......!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுழவர்தம் அடிதொழுவோம்!



அருட்பாவலர் நிலா தமிழின்தாசன்

வரண்ட நிலத்தையும் வளமுறச் செய்வான்
வயல் உழவன் - உலகில்
இருண்ட மனங்களில் அறிவொளி ஏற்றிடும்
ஏற்ற நல்லாசிரியர் அறிவுழவர்.

காகிதப் பூக்களும் மணம் பரப்பும் - நல்ல
கனிகளைச் சொரிந்திடும் தோப்பாகும்
யாகம் புரிவார் அருள் சொரிவார் - மாணவர்
யாவரும் இவர்பதம் தினம் தொழுவார்

தன்னைத் தேய்த்திடும் மெழுகுவர்த்தி- ஒளி
தருவதைப் போலநல் ஆசான்கள்
மின்னிடும் வைரங்கள் ஆக்கிடுவார் - மாணவர்
விளங்கிட மனத்திருள் நீக்கிடுவார்

போதிக்கும் நல்ல ஆசான்களிந்தப்
பூமியிலில்லை யேல் ஏது ஒளி
சாதிக்கும் மாணவர் நாங்கள் தலை
தாழ்த்தி வணங்கிடப் பூக்கும் ஒளி

வாருங்கள் வாருங்கள் மாணவரே
வணங்கிடுவோமெங்கள் ஆசான்களை
சேருங்கள் கல்விப் பாதையிலே ஒன்றாய்- நாம்
சீர்செய்வோம் முழு உலகையே நன்றாய்!



# கல்வி

கலைகளில் எல்லாம் உயர்ந்தது கல்வி
காலங்கள் தோறும் வாழ்வதும் கல்வி
நிலையில் உயர்ந்து நிற்பதும் கல்வி
சிலையில் ஒளிந்து இருப்பதும் கல்வி
சிந்தனைக்கு வழி சமைப்பதும் கல்வி
வேதம் யாவும் வீற்றிருப்பது கல்வி

கவிதை புனைய உதவுவதும் கல்வி
காவியங்கள் எழுத காப்பதும் கல்வி
ஓவியங்கள் ஒளி பெருக்குவதும் கல்வி
உயர்வால் உணர்வுகள் வளர்ப்பதும் கல்வி
பாவினில் பண்பாய் நிற்பதும் கல்வி
நாவினில் குடியிருப்பதும் நாமகள் கல்வி
நானிலம் போற்றும் நல்தமிழ் கல்வி

பள்ளியில் நாம் படிப்பதும் கல்வி
பயனுள்ள பயனை பெறுவதும் கல்வி
துள்ளித்திரியும் பாலர் பயில்வதும் கல்வி
துயரங்கள் அகலச் செய்வதும் கல்வி
வெள்ளை உள்ளம் படைத்ததும் கல்வி
வேதியர் கற்றுணர்ந்ததும் வேத கல்வி
உள்ளம் உயர்ந்து வாழ்வதும் கல்வி
உலகம் உய்ய ஓங்கி நிற்பதும் கல்வி



கவிஞர், அருட்கவி, C.N.துரைராஜா,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்சகோதரி
எஸ். றொமலா அன்ரனி HC (Bsc, PGDE)

# சவால் நிறைந்த கல்வி

கல்வி என்பது பிள்ளைகளின் எதிர் காலத்தைக் கருத்தில் கொண்டு வாழ்க்கைக்குத் தயாராகும் நோக்கில் வழங்கப்பட வேண்டிய செயற்பாட்டுத் தொகுப்பாகும். உடல், உள, மனவெழுச்சி, அறநெறி என்பவற்றால் முழுமையான முதிர்ச்சியைப்பெற வழிவகுப்பதே கல்வியின் குறிக்கோள் ஆகும். கல்வியினால் மட்டுமே மனிதன் மனிதனாக முடியும். எனவே இச்சிறப்பான கல்வியை அபிவிருத்தி செய்யவும், மேம்படுத்தவும் பெற்றோர், ஆசிரியர்கள், கல்விமான்கள் ஆகியோர் மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை அறிந்து அவற்றை மாணவர்கள் அபிவிருத்தி செய்ய வழிவகுக்க வேண்டும்.

இன்று உலகில் விஞ்ஞான தகவல் நுட்ப ரீதியாக வேகமான மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டு வருகின்றன. இம் மாற்றங்களின் ஊடாக மனித வாழ்க்கை முறையையும், பழக்கவழக்கங்களையும் மாற்றிக்கொண்டு செல்வதைக் காணக் கூடியதாகவுள்ளது. உலக மாற்றத்திற்கேற்ப வாழவும், ஏற்படும் சவால்களுக்கு முகம் கொடுக்கவும் பொருத்தமான கல்வியைப் பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

ஒவ்வொரு மனிதனின் வாழ்வும் இயற்கையானது. அது அனைவருக்கும் சிறப்பாக அமைந்து விடுவதுமில்லை. பாடசாலையானது மனிதனின் வாழ்வில் மிக முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தும் ஒரு சமூக நிறுவனம் ஆகும். மாணவர்கள் பாடசாலைகளால் மனிதர்களாக உற்பத்தி செய்யப்படுகிறார்கள். "கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன்" என்ற கூற்றுக்கு ஏற்ப கல்வியில் அக்கறை காட்டாமல் விடுவது கல்வி கற்கும் நேரங்களை வீணாக்குவது, கல்வியைக் கைவிடுவது போன்ற செயற்பாடுகள் சமூகத்தில் பாரிய பாதகமான விளைவை ஏற்படுத்தும்.

பண்பாடு, சமுதாய வாழ்க்கை என அனைத்துக்கும் தூண்டு சக்தியாக விளங்குவது அன்பு, அன்பைப் புரிந்து கொள்ளுவது முழுமையான கல்வியின் அம்சமாகும். அன்பு புனிதமானது, ஆற்றல் மிக்கது, ஆன்மீக அடிப்படை உடையது. இந்த உண்மையை இளம் மாணவர் மனதில் பதியச் செய்ய வேண்டும். அன்பு குறைந்தால் குற்றங்கள் அதிகரிக்கும் என்பது முதுமொழி ஆகும். மாணவர்களின் உளவியல் தேவைகளில் அன்பு முக்கியமான தேவையாகும். அன்பை விட வலிமையான ஆயுதத்தை நாம் எவ்வுலகிலும் காண முடியாது. அனைத்து மதங்களும் அடித்தளமாக மக்களுக்கு போதிப்பது அன்பையே.

"அனுபவங்களை வழங்குவதாகக் கல்வி அமைய வேண்டும்" என பிரபல உளவியலாளர் ஜோன் டூயி கூறியுள்ளார். பிள்ளைகளின் கற்றல் அனுபவங்களில் பிள்ளையின் ஆளுமையும், ஆசிரியர்களின் ஆற்றல்களும் பிரதான செல்வாக்கை செலுத்துவதோடு வீட்டுச் சூழலும் பெற்றோர்,



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உறவினர்களின் வாழ்க்கைப் போக்கும் மறைமுகமான ஆதிக்கம் செலுத்துகின்றது. இவற்றுடன் சம வயது நண்பர்கள், சமூகம், நோய்கள், பண்பாடு தங்கள் பொருளாதார நிலமைகள், வெகுசனத் தொடர்பு சாதனங்கள் என்பனவும் பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சியில் பங்களிப்பைச் செலுத்துகின்றன.

பொதுவான உளத்தாக்கங்கள் ஆரோக்கியமான எவருக்கும் ஏற்படலாம். பிள்ளைகளில் ஏற்படும் உளத்தாக்கங்கள் அவர்களின் வயது, உடல் வளர்ச்சி, உள விருத்தி, சமூக விருத்தி, அறிவாற்றல் முதிர்ச்சி, பாதுகாப்புணர்வு என்பற்றிலும் தங்கியுள்ளது. பிள்ளைகளால் ஏற்படும் உளத்தாக்கங்கள் பொதுவாக உணர்வு, நடத்தை, அறிதல், உறவாடல், ஆன்மீகம் போன்றவை சார்பாகவும் வெளிப்படுகின்றன. மனதில் ஏற்படும் வலிகள், தாக்கங்கள் அல்லது நெருக்கீடுகள் உடல் நிலையில் மாற்றங்களை ஏற்படுத்துவது போல் உணர்வும் சமநிலையில் பாதிப்பை ஏற்படுத்து-கின்றது.

இன்று எமது சூழலில் மாணவர்-களில் 10% ஆனோர் தமது பாடசாலை காலத்தைப் பூரணப்படுத்தாமல் இடை விலகு-கின்றனர் அல்லது இடையீடிட்ட வரவுடன் உள்ளனர். பாடசாலைக்கு வருகை தரும் மாணவர்களை நேர்த்தியாக பேணும் போது கற்றல் - கற்பித்தல் செயன்முறை சிறப்பானதாக அமையும். இதனால் மனிதப்பண்புள்ள ஒரு பெறுமதியான சமூகம் தன்னிச்சையாக உருவாதல் நிகழுகின்றது.

மாணவர்கள் தமது கல்வியில் அக்கறை காட்டாமைக்குப் பல காரணங்கள் செல்வாக்கைச் செலுத்துகின்றன.

- மாணவர்களின் உடல், உளம் சார்ந்த காரணிகளும் தவறான எதிர்பார்ப்புகளும்.
- தனது சிரேஷ்ட மாணவர்கள் வேலையின்றி இருப்பதை கல்வி கற்றுக் கொண்டிருக்கும் போதே அவதானித்தல்.
- கைத்தொலைபேசி பாவனையின் அதிகரிப்பு.
- இளவயதில் பணம் சம்பாதிப்பதில் ஆர்வம் காட்டுதல் புகைப்பிடித்தல். மது அருந்துதல், போதைவஸ்துப் பாவனை, திருடுதல் போன்ற தீய செயற்பாடுகள் காரணமாக பாடசாலைக்




கல்வியில் நாட்டம் குறைதல்.
- பாடசாலையின் சட்ட திட்டங்கள், தண்டனைகள், கவர்ச்சிகரமற்ற கற்றல் முறைகள், போக்குவரத்தில் பிரச்சனை, பொருளாதார நெருக்கடி, சகபாடிகளின் அழுத்தம் போன்றனவும் இடைவிலகலுக்குக் காரணமாகின்றன.

எனவே நாம் வாழும் சமுதாயத்தை உயிர்துடிப்புள்ள, மனிதம் மதிக்கப்படும் மானிடர்களாக, இதயமுள்ள உறவுகளாக உருவாக்க கல்வி மிகவும் இன்றியமையாதது. ஏற்படும் தடைகளை, சவால்களை உடைத்-தெறிந்து சிறந்த ஒரு கற்றறிந்த சமுதாயத்தை உருவாக்கவும், நம் எதிர்கால தலைமுறை-யினருக்கு கல்வியில் வாய்ப்பைப் பெற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செங்கதிரோனின் விளைச்சல்



சூசை எட்வேட்




"விளைச்சல்" என்னும் குறுங்காவியத்தை செங்கதிரோன் (கோபால கிருஷ்ணன்) யாத்து இலக்கிய உலகுக்குப் படைத்துள்ளார். அந்நூல் பற்றிய கண்ணோட்டத்தின் தொடர்ச்சி...

கதை துவங்குகிறது, கந்தப்போடி மனைவியை அழைத்து கூப்பாடு போடுகிறார். "ஆரங்கே பொன்னம்மா உன் அடுப்படி அலுவல் ஆச்சா நேரமும் கடந்து போச்சே! நீ என்ன செய்கிறாய்? போய்ச் சோறெடு, சிவ சிவா... ஏய் சுரைக்காயை என்ன செய்தாய்?" நீறினை நெற்றியிட்டு நெஞ்சினை வயலில் விட்டு சோறோடும் மீனைப் பிட்டுச் சுவைக்கின்றார் கந்தப்போடி.

முறைப்பெண் அன்னம்மா சமைந்ததைச் (சாமத்தியம்) சொல்லவில்லை. பழைய கோவத்தால் கந்தப்போடி கறுவுகின்றார்: அன்னம்மா அழகிதான் இங்கார் வந்து முடிப்பான் பார்ப்போம். பொன்னம்மா மறுகால் கொண்ணன் பொடியனைக் கேட்டுட்டு என் வீட்டுப்படியில் வந்து ஏறட்டும்! எளிய நாய்கள்! சன்னதம் எழுந்தாற்போல் கறுவினார் கந்தப்போடி.

சண்டியன் சாமி மாப்பிள்ளை செல்லனுக்கு இப்படி கூறுகின்றான்: அப்பனே விடு செல்லா நீ ஆண்பிள்ளை, அன்னம் மட்டும் ஒப்புதல் தந்தால் போதும் ஊரெல்லாம் எதிர்த்து வந்து தப்புத்தண்டா செய்தாலும் தகர்த்து உங்கள் கலியாணத்தை செப்பமாய் முடிப்பேன்.

செல்லன் அன்னம்மாவை இரகசியமாய் சந்தித்த வேளை அவன்: கத்தரிக்காய் ஆயக் காலைக்குள் நின்ற வேளை எத்தனை தரம் தான் அந்த இடத்துக்குப் போனாய்? சத்தியம் அத்தான்! உன்னை சந்திக்க ஆசை, ஆனால்.. உத்தமம் இல்லை நாளை ஊர்வாயை மூடலாமோ?

பெண் கேட்டுப் போகிறார்கள் எப்படி என்று பாருங்கள்... வெற்றிலைப் பகளிப் பாக்கு வெண்கலவட்டா வொன்றில் முற்றிய கோழிச்சூடன் (வாழைப்பழம்) முழுச்சீப்பு உள்ளே எல்லாம் ஒற்றைப்பட வைத்து மேலும் ஒரு துண்டு மஞ்சள் தேசி சுற்றியே வெள்ளைச் சீலை சுமக்கின்றாள் கனகம். முன்னால் கொழுக்கட்டைப் பெட்டி குலையோடு கோழிச்சூடன் முழுக்கட்டை போல வெள்ளை மொந்தனும் தயிரும் காவில் கலியாணப் பேச்சு சுபமாய் முடிந்தது : ...

"உள்ளதோ இன்னும் ஒரு பெட்டைக் குஞ்சுதானே! புள்ளையின் பேரில் தோட்டம், புதுவீடு வளவும் உண்டு! பள்ளவெளிக் காணி மொத்தம் பத்தேகால் ஏக்கர் தேறும். உள்ளது முழுவதும் அன்னம் ஒருத்திக்குத்தானே! என்றார் மாப்பிள்ளை தகப்பன் :...

என்னெண்ணம் வேறா என்ன? இளசுகள் வாழ வேணும்! சொன்னாத்தான் கொடுப்பாயா? நீ சும்மாத்தான் விடவா போறாய்! என்னால ஏண்டத எதையும் என் மகனுக்கெழுதி வைப்பன். சொன்னாரே கந்தப்போடி சுபமாக முடித்தும் வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுவார்த்தையின் பின் சந்தோச விருந்து ஒரு காட்சி : ....

சோறெடுத்து வா சொர்ணம்!... சுண்டலையும் கொண்டுவா கா! ஆரெடுக்கப் போனாபார்! ஆட்டிறைச்சிக் கறியை தண்ணீர் எடுத்துவை வள்ளி! நீளத்தில் பாயை விரி! ஊர் கதைக்கப் போடாகா! உண்டனவே எல்லாம் வை. உப்பென்று கேட்டார்கள் உறைப்பெங்கே மற்றொருவர் சப்பித்தான் தின்ன நல்ல சதையோடு எலும்பிறைச்சி தப்பாமல் தம்பிக்குவை, தயிர் சீனி போடு தங்கம் அப்பாடா நல்ல வெட்டு ஆ! ஆணத்தில் கொஞ்சம் ஊத்து.

கல்யாண ஏற்பாடுகள் சிலதைக் காணுங்கள் :..

இத்தனை ஏனம் எல்லாம் எலுமிச்சை சாம்பல் தும்பால் சுத்தமாய்க் கழுவிவிட்டுச் சுவர் ஓரம் அடுக்கிக் கையால் குத்திய அரிசி மா, தூள் கோப்பி தேன் பயறு சீனி புத்தம் புதிய பாய்கள் புளி உப்பு பொருட்கள் யாவும்...

வெள்ளையும் அடித்து வீட்டை வேலியும் பிரித்துக் கட்டி குள்ளமாய் இருந்த கொட்டுக் கிணற்றையும் உயரத்திச் சற்று வெள்ளை வார் மணலும் ஏற்றி வீட்டு முற்றத்தில் கொட்டி அள்ளியே இறைத்துக் காசை அழகரும் அலுவல் பார்த்தார்.

கல்யாண நாளன்று மாப்பிள்ளைத் தோழன் கூட்டிப் போதல் :

கல்யாண நாளன்று காலையில் மாப்பிள்ளைத் தோழன் வந்து நெல்லினைக் குவித்த மேட்டில் நிறை குடம் வைத்து வீட்டில் செல்லையா தலையில் பாலும் சிறுகென அரைத்த மஞ்சள் புல்லுமாம் அறுகும் தப்பி புது நீரில் முழுக வார்த்தனர்.

பந்தி வைத்தல் :

இனம் சனம் ஒவ்வொன்றாக இருத்தியே இலையும் போட்டு அனைவரும் வரிசையாக அமர்ந்த பின் உறவு கண்டு மனமெல்லாம் மகிழ்ச்சி பொங்க மணப் பெண்ணை ஈன்ற அன்னை கனகமோ ஓடி ஓடி கல்யாணப்பந்தி வைத்தாள்.

முதலிரவு:

அன்னம்மா அருகுவர ஆணழகன் செல்லையா அணைத்து மெல்லக் கூந்தலினைக் கோதி விட்டான். குளிர் வதனம் குங்குமமாய் சிவந்தாள் அன்னம். வேந்தன் என விளங்குமவன் விரிமார்பில் மென் விரல்கள் வீணை மீட்ட மாந்துகிறான் மங்கையவள் மலரிதழில் ஊறிவரும் மதுவை செல்லன் ஏந்துகிறான் இடை துவளும் ஏதிழையை இருவருக்கும் இன்பம் பொங்கும்.

கனி பிறந்தது:..

சாயந்தரம் ஒரு நாள் அன்னம் சாடையாய் நோகுதென்று சாய்ந்தனள். வயிற்றைத் தொட்டு சாயவும் கனகம் ஓடி மாய்ந்தனள் மருத்துவச்சி மணி ஆச்சி அனுபவங்கள் வாய்ந்தவள் அவளைச் செல்லன் வண்டியில் கூட்டி வந்தான் உன்னியே எழுப்பி ஓடும் உபாதையில் மருத்துவச்சி பண்ணினாம் பரிகாரங்கள். பார்வதி பெத்தா கூட பன்னீர்க் குட முடைத்து பாலகன் வெளியில் வீழ்ந்தான்.

காட்டுப் பீ (முதல் மலம்) கண்ட பின்னர் கனகம்மா சென்று சீனி போட்டு வெந்நீரில் செய்து பொத்தியே கொணர்ந்து வாயில் ஊட்டினாள் கரண்டியாலே. உமிஞ்சியே குடிக்கப் பிள்ளை ஓட்டமாய் ஓடிப்பெத்தா ஓமம் போட்டுடித்து நல்ல கோப்பியைக் கொணர்ந்து வைத்துக் குடி அன்னம் என்றாள் பின்னர் காப்பாத்து அம்மாள் தாயே கஸ்டங்கள் நீக்குவாயே கூப்பினாள் கரங்கள் மேலே கொல்லையில் ஆய்ந்து வந்த வேப்பிலைக் கொத்தைப் பிய்த்து வெளியிலே காவல் போட்டாள்.

இப்படியே படிக்கப் படிக்க தேன் சொட்டாய் இனிக்க இனிக்க கவிதைகள் சரளமாய்ப் போகிறது! புது வாழ்வின் முக்கியமான கட்டங்களை சுவைக்க சுவைக்க தெவிட்டாமல் சொல்லிக் கொண்டே போகிறார்.! விரிவஞ்சி இடை நிறுத்துகிறோம்!... தமிழ் கூறும் நல்லுலகம் இன்னும் சுவையான மேன்மையான கவிதைகளை எதிர்பார்த்து நிற்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசித்திரு....
பசியோடு தான் இருக்கிறேன்
அறிவை வளர்ப்பதற்காக!

தனித்திரு....
தனித்திருக்கிறேன்
சிந்தனை சிதறக்கூடாது
என்பதற்காக!

விழித்திரு....
விழித்திருக்கிறேன்
இரவு நேரங்களில் படிப்பதற்காக
மட்டுமல்ல..
வாழ்வின் விடியலுக்கான
உழைப்புடன்!

முயற்சி என்னும்
முட்டையிட்டுக்
கொண்டேயிரு
புழுவாய்த் தேடல் தொடரு
கூட்டுப் புழுவாய்ப்
பொறுமை காத்துக்கொள்
வாழ்க்கை வசப்படும் பார்
வண்ணத்துப் பூச்சியாய்

# கல்வியின் புலக்காட்சி

என்னைப் பெற்ற அந்த வலிகளிலும்
மறந்தாய் உன் கவலைகள்
என்னைப் பெறும் போது பட்ட கஷ்டங்கள்
எவ்வாறு ஈடு செய்வேன் என் தாய்க்கு
தான் கொடுக்கும் பரிசு - கல்வி

புரியாத வாழ்க்கையின் புதிரில்
பரிணாம வளர்ச்சிக்காக சூடேற்றும்
தீக்குச்சியால் சிந்தனையை
தீயென எற்றிடுவோம் கல்வியை

பசித்திருந்தும் தனித்திருந்தும் விழித்திருந்தும்
கற்றலுக்கு நாம் பெற்ற துன்பம்
பொறுமையின் வெளிப்பாடு - கல்வி

சாதி மத வேதம் இன்றி
ஏழை பணக்காரர் என்ற ஏற்றமின்றி
சண்டை சச்சரவு இன்றி
சகலவரும் செல்லுமிடம் கற்றலின் கூடம் - கல்வி

எழுதிப்பார் கவிதை வரும்
படித்துப்பார் பாடல் வரும்
கூட்டிப்பார் கூட்டல் வரும்
பெருக்கிப்பார் பெருக்கல் வரும்
வகுத்துப்பார் வகுத்தல் வரும்
இத்தனைக்கும் உன் ஒளியின் விம்பம் - கல்வி



திரு. நோயல் டானியல்
உவர்மலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் தற்கொலை பற்றிய ஒரு பார்வை



**போட்டிகள் நிறைந்த இன்றைய உலகில் "வலியவர் மட்டுமே வாழலாம்" என்னும் நிலை உருவாகியுள்ளது. போட்டியில் வெல்ல முடியாமல் தோற்றுப் போகும் பொழுது விரக்தி அடைந்து தைரியம் இழந்து வாழ்க்கையில் வெறுப்புற்று உயிரை மாய்த்துக் கொள்ளும் நூற்றுக்கணக்கான சம்பவங்கள் இப்பொழுதும் நம் கண்முன்னே நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. நம் நாட்டின் எதிர்கால நம்பிக்கைகளாக உள்ள மாணவர்களும் அதிக அளவில் தற்கொலைக்கு முயற்சித்தல் அல்லது தற்கொலை மரணமடைதல் கவலை தரும் அதேவேளை சிந்திக்க தூண்டும் விடயமாக உள்ளது.**



**திரு.அ.ஜெயநாதன்**
**தொழில் வழிகாட்டல் ஆலோசனை உத்தியோகத்தர்,**
**வலயக்கல்வி அலுவலகம், மட்டக்களப்பு**

தற்கொலை பற்றிய ஒரு பார்வை....

மாணவர்கள் என்பவர்கள் யார்? அவர்கள் தற்கொலைக்கு முயற்சிப்பதற்கான உள சமூக காரணங்கள் என்ன? ஒருவர் தற்கொலைக்கு முயற்சிக்க போகிறார் எனில் அவரிடம் காணப்படும் குணங்குறிகள் எவை? மாணவர் தற்கொலையை எவ்வாறு குறைக்கலாம் அல்லது தடுக்கலாம் அதில் நமது பங்கு என்ன? என்பன போன்ற வினாக்களுக்கு விடை தேடுவதே இந்த ஆக்கத்தின் நோக்கம்.

தற்கொலை என்பது

**"ஒருவர் ஏதாவது ஒரு காரணத்துக்காக உள்ளார்ந்த உத்வேகத்தில் தனது சொந்த விருப்பத்துடன் தன் உயிரை அழித்துக்கொள்வது".**

வருடம் தோறும் உலகளாவிய ரீதியில் ஏறக்குறைய 800,000 பேர் தற்கொலை செய்து கொள்வதாக புள்ளிவிபரம் குறிப்பிடுகிறது. இலங்கையில் 1995 ஆண்டு மட்டும் 8500 பேர் தற்கொலை செய்துள்ளனர் ஆனால் 2005 தொடக்கம் 2016 வரையும் வருடம் ஒன்றிக்கு சராசரியாக 3000 பேர் தற்கொலை செய்ததாகவே இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் ஆய்வறிக்கை குறிப்பிடுகிறது கடந்த காலங்களைவிட தற்போது தற்கொலை வீதம் இலங்கையில் சற்று குறைவடைந்துள்ளது எனலாம்.

தற்கொலை பற்றிய ஆய்வுகளை மேற்கொண்ட எமிலிடர்கீம் (1858 – 1017) என்ற பிரான்ஸ் நாட்டு சமூக விஞ்ஞானி, மூன்று வகையான தற்கொலைகள் இருப்பதாக கூறுகின்றார்.

✓ மிதமிஞ்சிய தன்முனைப்புடன் அல்லது அகங்காரத்துடன் செய்யப்படுவது (Egoistic Suicide)

சமூகத்துடன் ஒத்துப் போகாத சமூகத்தின் ஆதரவை நாடாத மனநிலையில் மிகையான தன்முனைப்புடன் தற்கொலை செய்து கொள்வது.

✓ அதீத பிறர் நலச்சிந்தனையில் சமூக பற்றோடு செய்யப்படுவது (Altruistic Suicide)

பிறரில் அல்லது தங்கள் சமூகத்தில் மிகுந்த பற்றுக்கொண்டு அவர்கள் நலன் காக்கும் எண்ணத்தில் தற்கொலை செய்வது. உயிரை தானம் செய்வது. இது பெரும்பாலும் இராணுவம் மற்றும் ஒரு இனத்தின் விடுதலைக்காக போராடும் போராளிகளால் மேற்கொள்ளப்படுகிறது.

✓ விருப்பம் ஈடேறாதவர்களால் செய்யப்படுவது (Anomic Suicide)

சமூகம் மிகவும் ஆபத்தானது என்ற சிந்தனையில் சமூகத்துக்கு வெளியில் நின்று சிந்தித்து தங்கள் இலட்சியம் அடையப்படாத சூழ்நிலையில் தற்கொலையே சிறந்தது என எண்ணி உயிரை மாய்த்துக் கொள்வது.

உலகில் நடக்கும் தற்கொலைகள் மேற்குறிப்பிட்ட மூன்று வகைக்குள்ளும் அடங்கும் என்பதே எமிலியின் கருத்தாகும்

## மாணவர்கள் என்பவர்கள் யார்?

மாணவர்களில் விசேடமாக 13 தொடக்கம் 19 வரையான வயதுப் பரம்பலை விடலைப் பருவம் பருவம் (Adolescent/teen age) என குறிப்பிடப்படுகின்றோம். "Adolescere" என்னும் இலத்தீன் சொல்லில் இருந்து வந்ததே "Adolescent" என்ற ஆங்கிலச் சொல் "Adolescere" க்குரிய தமிழ் மொழிபெயர்ப்பை நேடியாக நோக்கினால் "வளரும் நிலை" என்று பொருள் தருகிறது. எனவே இந்த வயதுப் பிள்ளைகளை "வளரிளம் பருவத்தினர்" என குறிப்பிடுவதே பொருத்தமானதாக இருக்கும். உடலிலும் உள்ளத்திலும் வளர்ச்சி மாற்றங்கள் விரைவாக நடைபெறும் காலம் அது. உடல் வளர்ச்சியை பற்றி எல்லோருக்கும் நன்றாக தெரியும். ஆனால் உளவியல் மாற்றங்களையும் அறிந்திருக்க வேண்டியது பிள்ளைகளை புரிந்து கொள்ள உதவும்.

- இப்பருவத்தினரின் மனவெழுச்சி (Emotion) நெருக்கடியும் சமநிலை அற்றதாகவும் காணப்படும்
- கூச்ச சுபாவம் கொஞ்சம் அதிகமாக இருக்கும்
- அதிகாரத்துடன் மற்றவர்கள் கட்டளையிட்டு கட்டுப்படுத்துவதை விரும்ப மாட்டார்கள் அதிலிருந்து விடுபடவே விரும்புவர். கோபத்தை பொருத்தமாக கையாளும் பக்குவம் குறைவாக இருக்கும்.
- சுதந்திர உணர்வு மிகுந்து மேலெழும் வயது அது
- தாம் பெரியவர்கள் என கருதி மற்றவர்களும் தம்மை அவ்வாறே நடாத்த வேண்டும் என விரும்புவர்
- தம்மோடு ஒரு நண்பர் கூட்டத்தை இணைத்து அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பர்
- தாம் விரும்பும் நபர் போன்று நடையுடை பாவனைகளை மாற்றிக் கொள்வர் (Hero Worship)
- குறைகளை சுட்டிக் காட்டுவது பிடிக்காது நியாயம் கற்பிக்க முயல்வர்
- திடீர் முடிவுகளை எடுப்பர்

மேற் கூறிய உளம் சார்ந்த மாற்றங்கள் வளரிளம் பருவத்து மாணவர்களிடம் இயற்கையாகவே காணப்படுகிறது.

இதனை கருத்திற் கொள்ளாது பெற்றோர் தங்கள் விருப்பங்களை வலிந்து பிள்ளைகளிடம் திணிக்க முயலும் போது பிள்ளைகளின் மனம் இறுக்கமடைகிறது. பெற்றோரின் பிள்ளைகளுடனான அணுகுமுறை பொருத்தமானதாக இருக்க வேண்டும் இல்லையேல் அன்பற்ற, புரிதலற்ற குடும்ப சூழ்நிலை அவர்களின் விரக்திக்கு காரணமாகி பிள்ளைகள் தற்கொலைக்கு முயற்சிக்கும் நிலை உருவாகிறது இப்படி நடந்த உண்மைச் சம்பவங்கள் சமூகத்தில் இல்லாமல் இல்லை.

அதேபோல் பாடசாலைச் சூழலும் சில சந்தர்ப்பங்களில் மாணவர்களை இந்நிலைக்கு தள்ளிவிடுகிறது. அதிபர், ஆசிரியர்களின் நெகிழ்ச்சியற்ற போக்கு கண்டிப்பான உத்தரவுகள் அல்லது கேலிப் பேச்சுக்கள் பொருத்தமற்ற சுட்டிக்காட்டல்கள் மாணவர்களின் அகச்சூழலில் எதிர் மறையான தாக்கத்தை ஏற்படுத்தி அவமானத்தை அல்லது இயலாமையை உண்டாக்கி தங்களை மாய்த்துக் கொள்ள வழிவகுக்கிறது.

இன்றைய சமூகச்சூழல் பிள்ளைகளை வலுவூட்டக் கூடியநிலையில் இல்லை என்றே கூறவேண்டும் பூகோள மயமாக்கல் நமது கூட்டுக் குடும்ப வாழ்க்கையை அல்லது சமூக இடைவினையை சிதறடித்துவிட்டது. "நாம் எல்லோரும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என சிந்தித்த நாம் இப்போது "நான் மட்டுமே" என சிந்திக்கும் சமுகமாக மாறிவிட்டோம் காரணம் சமகால அரசியல் பொருளாதார மற்றும் கல்வி முறைமைகள். சமுகவலைத் தளங்ளை கட்டுப்படுத்தாமல் சுதந்திரமாக ஊடுருவ விட்ட நாம் அதை எவ்வாறு முகாமை செய்வது என பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்க தெரியாமல் இருக்கிறோம். அவர்களுக்கு நல்ல முன்மாதிரிகள் சமுகத்தில் இல்லை என்றே கூறவேண்டியிருக்கிறது. பிள்ளைகளின் பன்முகதிறன்களை பார்க்காமல் பரீட்சைப் புள்ளிகளை மட்டுமே கவனத்திற் கொண்டு பதாதைகளை (Banner) தொங்கவிடும் கூட்டமாக மாறிவிட்டோம்.

இந்த நிலைமைகள் எல்லாம் மாணவர்களின் தனித்துவத்தை சிதைத்து பிழையான திடீர் முடிவுகளை எடுப்பதற்கான ஏதுக்களாக அமைந்துவிடுகிறது.

ஒரு மாணவன் மாணவி தற்கொலைக்கு முயற்சிக்க போகிறான்(ள்) எனில் காணப்படும் குணங்குறிகள் சில...

**உணர்ச்சி சார்ந்தவை**

- அதிக துக்கம், சோகத்தில் ஆழ்ந்திருத்தல்
- எதிர் காலத்தில் நம்பிக்கையற்று விரக்தியில் இருத்தல்
- எனக்கு நடக்க கூடாதது நடந்து விட்டதே என அவமானப்படுத்தப்பட்ட உணர்வு
- நம்பிக்கைக்கு துரோகம் செய்து விட்டார்களே என்ற ஏமாற்றம்
- என்னால் தான் இப்படி நடந்தது என்ற குற்ற உணர்வு
- உதவியற்ற கையறு நிலை
- அதிக கோபம் அல்லது ஆவேசப்படல்

**சிந்தனை சார்ந்தவை**

- நான் பிரயோசன மற்றவன்(ள்) என்ற எண்ணம்
- எனக்குத்தான் எல்லா கஸ்டங்களும் தொடர்ந்து வருகிறது என்ற எண்ணம்
- நான் இருப்பது தானே பிரச்சினை இறந்தால் பிரச்சினை தீரும் எனச் சிந்திப்பது
- இனியும் என்னால் தாங்க முடியாது எனச் சிந்திப்பது
- இந்த பிரச்சினைக்கு தீர்வே இல்லை என்ற எண்ணம்



**நடத்தை சார்ந்தவை**

- ஒதுங்கியிருத்தல் தனிமையில் மறைவான இடங்களில் இருத்தல்
- நித்திரை குழப்பம் அல்லது நித்திரையின்மை
- உணவில் விருப்பமின்மை
- குடும்ப கடமைகளை முன் கூட்டியே செய்தல்
- உறவுகளில் இருந்து விலகி இருத்தல் கதைப்பதை தவிர்த்துக்கொள்ளல்

ஒரு மாணவனிடம் தற்கொலைக்கு முயற்சிப்பதற்கான குணங்குறிகளில் ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவையோ காணப்பட்டால் அவன் தற்கொலை செய்யக்கூடிய அபாயம் இருக்கிறது என கருதலாம்.
மாணவர் தற்கொலையை தடுத்தல் அல்லது குறைத்தலை இரண்டு நிலைகளில் சிந்திக்கலாம்

1. உடனடியான உளவியல் முதலுதவி

உடல் ரீதியான உடனிருத்தல், தற்கொலை எண்ணமுடைய பிள்ளையின் அருகில் இருத்தல், போதியளவு நேரம் கொடுத்து நான் உன்னில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆர்வமுடையவராகவும் அக்கறை கொண்டவராகவும் நான் இருக்கிறேன் என்பதை பிள்ளை உணரும் வகையில் அருகில் இருத்தல்.

உள ரீதியான உடன் இருத்தல் பிரச்சினையில் உள்ள பிள்ளை என்ன உணர்ச்சித் தாக்கத்தில் இருக்கிறதோ அதை சரியாக புரிந்து கொள்வதும் அவன்(ள்) பிரச்சினையினை பார்க்கும் கண்ணோட்டத்தில் நானும் பார்க்கிறேன் என்பதை வார்த்தைகளில் வெளிப்படுத்தல்.

துருவித் துருவி கேள்விகள் கேட்பதை தவிர்த்து பிள்ளை தன் சிக்கல்களை சொல்ல விரும்பினால் ஆர்வத்துடன் கேட்டல்.

செவிமடுக்கும் போது பதில் சொல்ல நேர்ந்தால் தீர்ப்பிடுகின்ற அல்லது கிளறுகின்ற பதிலிறுத்தலை தவிர்த்து உன்னைப் புரிந்து கொண்டேன் என்னும் வகையில் பதிலிறுத்தல் பிள்ளைக்கு ஆறுதலை கொடுக்கும்.

தேவை ஏற்படின் தொழில் வாண்மைமிக்க உளவளத் துணையாளரின் உதவியை பெற்றுக் கொடுத்தல்.

2. தற்கொலையை தடுத்தலுக்கான முயற்சிகள்

கணவனும் மனைவியும் சிறந்த வாழ்க்கைப் பாணியை கொண்டிருத்தல் மற்றும் பிள்ளைகளுடனான பொருத்தமான அணுகு முறையை வீட்டில் பிரயோகித்தல் என்பதே நல்ல பெற்றோரியம் என விளங்கிக்கொள்ளல்.

பெற்றோரின் கனவுகளையும் இலட்சியங்களையும் நிறைவேற்றும் இயந்திரங்களாக பிள்ளைகளை வரையறைக்குள் வளர்க்காமல் தனித்துவங்களை கண்டுபிடித்து அவர்களின் இயல்புக்கேற்ப வளரும் குடும்ப சூழலை ஏற்படுத்தல்.

பாடசாலைகளில் உணர்ச்சிகளை கையாளும் பயிற்சிகளை (Emotional Coaching) வழங்குவதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தல் வெறும் போட்டியினை வளர்க்கும் மைதானங்களாக இல்லாமல் விழுமியங்களை அறிமுகம் செய்யும் மையங்களாக பாடசாலைகளை மாற்றியமைத்தல் மற்றும் சவால்களுக்கு சரியான வகையில் முகம் கொடுக்க வல்ல மாணவர் சமூகத்தை உருவாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் பாடசாலைகளுக்கே உரியது.

சமூக இடைவினைகள் தொடர்புகள் ஆரோக்கியமானதாக அமைக்கப்பட வேண்டும் உள சமூக நன்நிலை சார்பான முன்னெடுப்புக்கள் சமூக அமைப்புக்களால் திட்டமிட்டு நடைமுறையில் இருக்க வேண்டும்

மாணவர் தற்கொலை என்பது ஓர் உள சமூக பிரச்சினை மாணவர்களுடன் தொடர்புபட்ட அனைவரும் ஓரணியில் நின்றே இதற்கான தீர்வை காண வேண்டும். பிரச்சினையை வெளியில் இருந்து பார்த்து அவதானிப்புக்களையும் ஊகங்களையும் வெளியிடுவதை விடுத்து பிரச்சினைக்கு உள்ளே வந்து அதை தீர்ப்பதற்கான பங்காளர்களாக மாற வேண்டியதே இன்றைய தேவையும் அவசியமும் ஆகும். தொடர்ந்து சிந்திப்போம்.

**உன் கைரேகையைப் பார்த்து**
**உன் எதிர்காலத்தைத் திருப்பி**
**விடாதே !**
**ஏனெனில் கை**
**இல்லாதவருக்கும்**
**எதிர்காலமுண்டு!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மறைக்கல்வியின் அவசியம்




-அ. இராசேந்திரம்
ஓய்வு நிலை அதிபர் - மூதூர்

**உதவி நன்கொடை பெற்று வளர்ந்து வந்த கல்விக்கூடங்களை ஆட்சியாளர்கள் என்று பொதுவுடமையாக்கிக் கொண்டார்களோ, அன்று முதலே கல்வி மட்டுமல்ல மறை அறிவு, ஒழுக்கம், கட்டுப்பாடு எல்லாமே சிதறிச் சீரழிவதாயிற்று.**

மறை அறிவானது அன்று ஆரம்ப பிரிவினர்களுக்கு "சின்னக்குறிப்பிடம்" என்ற நூல் வடிவிலும் அமைந்திருந்தன. அவை இரண்டுமே வினா - விடை ரீதியாகவே அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவை தவிர சிலுவை அடையாளம், கிறிஸ்து கற்பித்த செபம், மங்கள வார்த்தைச் செபம், விசுவாசப்பிரமாணம், திரித்துவப்புகழ், பாவசங்கீர்த்தனச் செபம், உத்தமமனஸ்தாபச் செபம், விசுவாச முயற்சி, நம்பிக்கை முயற்சி, தேவசிநேக முயற்சி, காலைச்செபம், மாலைச் செபம் என்கின்ற செபங்கள் யாவுமிருந்தன. வினா விடைகள், செபங்கள் சகலதையும் சகல மாணவ மாணவியர்களுமே மனனம் செய்து ஒப்பித்தாக வேண்டும். அவை பூரணமாக நிறைவேறியும் வந்தன.

அன்று பீடப்பணியாளர்களாக பூசைக்கு உதவி வந்த சகலரும் இலத்தின் மொழியிலேயே பல செபங்களை மனனம் செய்து மிகவும் பயபக்தியுடனும், ஆசார முறையுடனும் சொல்லுவார்கள். இவை பார்ப்பதற்கும் கேட்பதற்கும் பக்தியுணர்வைத் தூண்டக்கூடிய வகையிலும் இருந்தன.

இவற்றை உற்றுணர்கின்ற போது பிள்ளைகளிடையே நிறைவான மறை அறிவு, ஒழுக்கம், கட்டுப்பாடு என்பன பூரணமாகவே இருந்ததைக் காண முடிந்தது. இதற்கு முகாமைத்துவம் நிறைந்த பாடசாலை ஆசிரியர்களின் வழிநடத்தலும் பங்குகளுக்குப் பொறுப்பாக இருந்த அருட்தந்தையர்களின் வழிகாட்டல்களுமே காரணமாகும்.

இப்படியான உன்னதமான வழிகாட்டல்களில் வழிவந்த சிறியவர்களும் பெரியவர்களும் பூசை வழிபாட்டிலே பங்கு கொள்கின்ற போது பூரணமான ஆத்ம சரீர ஆயத்தங்களுடனே நன்மையும் பெற்று வந்தார்கள்.

இன்று காலத்தின் தேவைக்கான புதுமுறையான கற்பித்தல் முறைகள் சகல பாடங்களிலுமே பரீட்சைகளை மையமாகக் கொண்டு கற்பிக்கப்படுகின்றன. இருந்த போதும் வாழ்க்கை முறையுடன் என்றுமே பின்னிப்பிணைந்துள்ள "மறைக்கல்வி" புதிய முறையிலே சீருடையதாகக் காண முடிவதில்லை. புனித வேதாகமத்தை முன்னிறுத்தியதான கல்வி முறை புது முறையாக இருந்த போதும் ஏனோ மாணவரிடையே வாழ்க்கை முறையுடனேயே சீராக சேர்ந்திருப்பது போதாமலேயே காணப்படுகின்றது. உதாரணமாக பாடசாலையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு விலகிய இளைஞர், யுவதிகள் கூட்டத்தினரை உற்று நோக்கிப் பாருங்கள்.

இன்று சகல பிள்ளைகளுமே காசுக்காக விற்கப்படும் பிரத்தியேக வகுப்புப் பாடங்களிலே காட்டுகின்ற அக்கறை பாடசாலை வகுப்புகளிலே காட்டுவதென்பது குறைவாகவே இருப்பதை அவதானிக்க முடிகின்றது. இதன் மூலம் பாடசாலை ஆசிரியர்களை மதிக்கின்ற தன்மைகூட குறைவாகவே காணப்படுகின்றது.

வாழ்க்கையின் நெறிமுறைகளோடு தொடர்புடைய சுடுகாடு மட்டும் தொடர்ந்து வருகின்ற "மறை அறிவு" சமூக உருவாக்கிகளாக மாணவரிடையே செறிவுபடுத்தப்படல் அவசியமாகிறது. இதனை நன்குணர்ந்து கொண்ட எமது திருச்சபையானது பங்குகள் தோறும் ஆலய மண்டபங்களிலே வாரத்தில் ஒரு நாள் மறைக்கல்வி போதனையை நடத்தி வருகின்றது. இத்தகைய வகுப்புக்களிலே மாணவர்களின் பங்களிப்பு எவ்வளவு தூரம் பயன்பாடுடையதாகிறது என்பது கேள்விக்குறியாகவே காண முடிகிறது. ஏனெனில் வாரத்தில் ஒரு நாள் நடைபெறும் இந்த வகுப்பைப் புறந்தள்ளி அந்த வேளைகளிலே நடைபெறும் பிறபாடங்களுக்காக பிரத்தியேக வகுப்புகளிலே கலந்து கொள்ள வேண்டும் என்கின்ற ஆசிரியர்களினதும் பெற்றோர்களினதும் கட்டுப்பாடு முதன்மை அடைகின்றது.

இந்த அவல நிலை பூரணமாகவே தவிர்க்கப்படல் வேண்டும். சகல பிள்ளைகளுமே மறை அறிவூட்டும் வகுப்புகளிலே தவறாது பங்குபெற சகலரும் ஒத்துழைக்க வேண்டும்.

கிறிஸ்தவ ஆசிரியர்கள் பலர் பிற பாடசாலைகளிலே கற்பிக்கின்றார்கள். இவர்களும் தமக்கேற்படுகின்ற கஸ்டங்களை பெரிதுபடுத்தாது சமூகப் பணியாளர்களாக ஆலயங்களிலே நடத்தப்படுகின்ற மறைவகுப்புகளிலே கலந்து கற்பிக்கலாம். பாடசாலைகளிலே வாரத்தில் இரண்டு பாடவேளைகள் மட்டும் மறைக்கல்விக்காக ஒதுக்கப்படுகின்றன. இவ்விரு வேளைகள் மட்டும் ஆண்டுக்கான பாடத்திட்டத்தை நிறைவாக்கப் பொதுமானதாக இருக்காது. இதனால் ஆலய மறை வகுப்புகளிலே கலந்து கொள்வதன் மூலம் இரண்டு பாடவேளைக்குப் பதிலாக மூன்று பாடவேளைக்குரிய பாடத்திட்டத்தை ஓரளவு நிறைவாக்கவும் வாய்ப்பாகலாம்.

எனவே கத்தோலிக்க ஆசிரியர்களே! எமது சிறார்களை தீயவை ஒழிந்த, நல்லொழுக்கங்கள் நிறைவான நற்பிரசைகளாக்க பங்குகள் தோறும் நடைபெறுகின்ற மறை வகுப்புகளிலே கலந்து கற்பித்து நல்லாசிரியர்களாக மட்டுமல்லாது சமூகத் தொண்டர்களாகவும் மாற முற்படுவீர்களாக.

பெற்றோரே! பெரியவர்களே! உங்கள் சிறார்கள் எந்தப் பாடசாலையில் கற்றாலும் கூட வாரத்தில் ஒருநாள் பங்குகள் தோறும் நடைபெறுகின்ற மறைவகுப்புகளுக்கு அனுப்பி ஞானமும் கல்வியும் பெற்ற நற்பிரசைகளாக்க முற்படுங்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தோலிக்கத் திருமறை

# விவிலியம் பற்றிய அடிப்படை



அருட்பணி. அ.அ. நவரெத்தினம்
முது நிலை விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக் கழகம்.

விவிலியம் கிறிஸ்தவர்களின் புனித நூலாகும். ஆங்கிலத்தில் பைபிள் என்பது கிரேக்க வார்த்தையான பிப்லியாவின் மொழிபெயர்ப்பாகும். பிப்பிலியா என்றால் புத்தகங்கள் என்று கிரேக்க மொழியில் கூறுவர். இப்புனித நூல் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்று இரு பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இயேசு நாதரின் பிறப்புக்கு முன் நடந்தவைகளின் தொகுப்பு பழைய ஏற்பாடாகும். இயேசு நாதரின் பிறப்பும், அதன்பின் ஏறக்குறைய 100 ஆண்டுகள் வரை நிகழ்ந்தவைகளின் தொகுப்பு புதிய ஏற்பாடாகும். இயேசு நாதரின் பிறப்பால் இன்றைய உலக சரித்திரமும் கி.மு., கி.பி., என்று பிரித்துக் காண்பிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இது பாரம்பரிய கருத்து, ஆனால் இன்றைய நவீன ஆய்வுகளுக்கான பாவனை பொது யுகம் (Common Era – CE), பொது யுகத்திற்கு முந்தியகாலம் (Before Common Era – BCE).

**பழைய ஏற்பாடு**

யூத விவிலியமான பழைய ஏற்பாட்டை யூதர்கள் TANANK என்று வகையிட்டு மூன்று வகையாக பிரிக்கின்றார்கள். அவையாவன: T – Torah – சட்ட நூல்கள் (5), N –Nebium - இறைவாக்கு நூல்கள் (21), K – Ketubim - இலக்கிய நூல்கள் (13). இவை மொத்தம் 39 நூல்களாகும். இதுவே எபிரேய விவிலியம் எனப்படுகிறது.

ஆயினும் கி. மு. 2ம் நூற்றாண்டின் பிற்பாடு பாலஸ்தீனாவுக்கு வெளியே கிரேக்க ஆட்சிப் பகுதியில் குடியேறிய மக்களால் ஏபிரேய மொழியின் பரிச்சயமின்மை காரணமாக அவர்களால் ஏபிரேய விவிலியத்தை படித்து புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்களின் தேவையினை நிறைவுசெய்யும் வண்ணம் கிரேக்க மன்னனின் உதவியினால் எழுபது ஏபிரேய விவிலிய அறிஞர்கள் வருவிக்கப்பட்டு அவர்களிள் துணையுடன் ஏபிரேய விவிலியம் கிரேக்க மொழியில் முதலில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது. இம்மொழி பெயர்ப்பினையே நாம் 'எழுபதின்மர் நூல்' – செப்வாஜின்ட் (Septuagint – LXX) என்று அழைக்கின்றோம். அத்துடன் கிரேக்க மொழி பேசிய யூதர்களுக்கு இறைவனின் வெளிப்பாட்டினுடாக எழுதப்பட்ட ஏழு நூல்களும் எபிரேய விவிலியத்துடன் சேர்க்கப்பட்டு 46 பழைய ஏற்பாடு உருவாக்கப்பட்டது. அதனை கத்தோலிக்க திருமறையும் இறைஏவுதல் பெற்றவை என்று ஏற்றுக் கொள்கின்றது. ஏனைய திருச்சபைகள் யூதர்களைப் போன்று பழைய ஏற்பாட்டில் ஏபிரேய விவிலியத்தின் 39 நூல்களை மாத்திரம் இறைஏவுதல் பெற்றவை என்று ஏற்றுக்கொள்கின்றார்கள். அதனால்தான் இன்றுள்ள தமிழ் பொதுமொழிபெயர்ப்பு விவிலியத்தில் இந்த ஏழு நூல்களும் பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் நடுவில் இணைத் திருமறை நூல்களென இணைக்கப்பட்டுள்ளன.

**சட்ட நூல்கள் - 05**

தொடக்கநூல், விடுதலைப்பயணம், லேவியர், எண்ணிக்கை, இணைச்சட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இறைவாக்கு நூல்கள் - 21**

முன்னைய இறைவாக்கினர்கள் - 06 – யோசுவா, நீதித்தலைவர்கள், 1, 2 சாமுவேல், 1, 2 அரசர்கள். பின்னைய இறைவாக்கினர்கள் - 15: மூன்று பெரிய இறைவாக்கினர்கள்: எசாயா, ஏரெமியா, எசேக்கியேல். சிறிய இறைவாக்கினர்கள் - 12: ஒசேயா, யோவேல், ஆமோஸ், ஓபதியா, யோனா, மீக்கா, நாகூம், ஆபகூம், செப்பனியா, ஆகாய், சக்கரியா, மலாக்கி.

**இலக்கிய (அறிவுரை) நூல்கள் - 13**

யோபு, திருப்பாடல்கள், நீதிமொழிகள், சபை உரையாளர், இனிமைமிகு பாடல், ரூத், புலம்பல், தானியேல், 1, 2 குறிப்பேடு, எஸ்ரா, நெகேமியா, எஸ்தர்

இவையே யூத, எபிரேய விவிலியத்தின் 39 நூல்களாகும்.

கத்தோலிக்க திருமறையின் 46 நூல்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**வரலாற்று நூல்கள்:**

தொடக்கநூல், விடுதலைப்பயணம், லேவியர், எண்ணிக்கை, இணைச்சட்டம் இது ஐந்நூல் வரலாறென அழைக்கப்படுகிறது. அதனுடன் யோசுவா, நீதித்தலைவர்கள், 1, 2 சாமுவேல், 1, 2 அரசர்கள் (இவை இணைச்சட்ட வரலாறு), எஸ்ரா, நெகேமியா, 1, 2 குறிப்பேடு (குறிப்பேட்டு வரலாறு), 1, 2 மக்கபேயர் (மக்கபேயர் வரலாறு), ரூத்து, தோபித்து, யூதித்து, எஸ்தர் (அறிவுரை நூல்கள்) போன்றவை பழைய ஏற்பாட்டு வரலாற்று நூல்களாகும்.

**ஞான நூல்கள்**

யோபு, திருப்பாடல்கள், நீதிமொழிகள், சபை உரையாளர், இனிமைமிகு பாடல், சாலமோனின் ஞானம், சீராக்கின் ஞானம் ஆகியவை இலக்கிய நூல்களாகும்.

**இறைவாக்கு நூல்கள்**

பெரிய இறைவாக்கினர்கள் 4: எசாயா, ஏரெமியா, எசேக்கியேல், தானியேல்.

சிறிய இறைவாக்கினர்கள் 12: யோவேல், ஆமோஸ், ஓபதியா, யோனா, மீக்கா, நாகூம், ஆபகூக்கு, செப்பனியா, ஆகாய், சக்கரியா, மலாக்கி.

**புதிய ஏற்பாடு**

புதிய ஏற்பாட்டில் 27 புத்தகங்கள் உள்ளன. அவற்றைக் கிறிஸ்தவர்கள் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்துகின்றார்கள்.

1. நற்செய்தி ஏடுகள் - இயேசுவின் வாழ்வும், பணியும் - 04
2. திருத்தூதர் பணிகள் - தொடக்கத் திருச்சபையின் செயற்பாடுகள் - 01
3. திருமுகங்கள் - தொடக்கத் திருச்சபைக்குச் சோதனையும், அறிவுரையும் - 21
4. திருவெளிப்பாடு – துன்புற்று மகிமையுறும் திருச்சபை - 01

## ஒரே பார்வையில் விவிலியம்

| மக்களினம் | பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாடு | மொத்தம் |
|---|---|---|---|
| எபிரேய யூதர்கள் | 39 | - | 39 |
| கிரேக்க யூதர்கள் | 39 + 7 | - | 46 |
| கிறிஸ்தவர்கள் | 39 | 27 | 66 |
| கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் | 46 | 27 | 73 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க பாடசாலக் கல்வி முறை ஒரு நோக்கு ....



சந்தான்பிள்ளை தேவசகாயம்
(முன்நாள் ஆசிரியர் மத்திய நிலைய முகாமையாளர்,
திருகோணமலை கல்விவலயம்)
நியூ யோர்க்

கல்வி முறைமை (Education system) என்பது கல்விசார் நிறுவனங்களான பாடசாலைகள் கல்லூரிகள் பல்கலைக்கழகங்கள் மக்களுக்கு கற்பித்தலை மேற்கொள்கின்ற முறைமை கல்வி முறைமை என வரையறை செய்யலாம். ஒரு சமுதாயம் மதித்துப் போற்றும் வாழ்க்கை நோக்கங்கள் குறிக்கோள்கள் ஆகியவற்றையும் வழிவழியாக அதனுள் பரவிக்காணப்படும் திறன்களையும் இன்றைய தலைமுறைக்கு அளிக்க சமுதாயம் மேற்கொள்ளும் பல்வேறு செயல் முறைகளின் தொகுப்பாகவோ அல்லது அறிவு விழுமியங்கள் திறன்கள் மனப்பாங்குகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளும் செய்முறையாகவோ இதனை விளங்கிக்கொள்ளலாம்.

உலக வல்லரசுகளில் ஒன்றான ஐக்கிய அமெரிக்கா சிறந்த கல்வி வழங்கும் நாடாகப் போற்றப்படுவது யாவரும் அறிந்ததே. இது ஒரு குடியேற்ற நாடாக இருப்பதால் பல்லின கலாசாரம் பண்பாடு மொழிகளைக் கொண்ட பல்வேறு நாட்டவர்கள் வாழ்கின்ற நாடாக காணப்படுகின்றது. இந்நாட்டின் கல்வி முறைமையானது எமது நாட்டுக்கல்வி முறைமையுடன் ஒப்பிட்டு நோக்குமிடத்து பல்வேறுபட்ட சிறப்பு நோக்கங்களையும் பண்புகளையும் கொண்டதும்: மிகவும் பரந்துபட்ட தன்மைகளைக் கொண்டதுமாக விளங்குகின்றது. இருப்பினும் இக்கல்வி முறையின் சில முக்கிய அம்சங்களை மட்டும் பதிவு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அமெரிக்காவின் பாடசாலைக் கல்வியானது அரச பாடசாலைகள் (public schools), தனியார் பாடசாலைகள் (private schools), வீட்டுப் பாடசாலை (Home school) என்ற மூன்று பிரதான வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அரச பாடசாலைகளால் தரம் ஒன்று முதல் தரம் பன்னிரண்டு வரை இலவசமாக கல்வி வழங்கப்படுகின்றது. இதற்கான நிதியானது அந்தந்த நகர மாவட்ட மாநில எல்லைக்குள் பெறப்படும் வரிப்பணத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

அரசாங்க பாடசாலையானது முன்பள்ளி (Kindergarten) ஆரம்பபாடசாலை (Elementary school) இடைநிலை பாடசாலை (Middle school) உயர் பாடசாலை (High school) என்றவாறு பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பாடசாலையும் தனித்தனியான நிர்வாகத்தின் கீழ் இயங்குகின்றது. முன்பள்ளிக் கல்வியானது 4-5 வயதுடைய குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றது. ஆரம்ப பாடசாலையானது தரம் 1 முதல் தரம் 5 வரையான வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகளாகும். இடைநிலை பாடசாலையானது தரம் 6 முதல் தரம் 8 வரையான வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகளாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் பாடசாலையானது தரம் 9 முதல் தரம் 12 வரையான வகுப்புக்களைக் கொண்ட பாடசாலை-களாகும்.

அடுத்து தனியார் பாடசாலைகளை நோக்குமிடத்து சுதந்திரமான பாடசாலைகள் அல்லது அரசசார் பற்ற பாடசாலைகள் என்றவாறு அழைக்கப்படுகின்றது. பெரும்பாலும் தனியார் பாடசாலைகள் கிறிஸ்தவ தேவாலயங்களாலும் இனமத அமைப்புகளாலும் நடாத்தப்படுகின்ற பாடசாலைகளாகும். சுமார் 15%மான பெற்றோரே தனியார் பாடசாலைகளில் தமது பிள்ளைகளை கற்பதற்காக அனுப்புகின்றனர். இப்பாடசாலைகள் பொதுக் கல்வித் திட்டத்துடன் மதச் சிந்தனை சார்ந்த விடயங்களையும் உள்ளடக்கி கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுக்கின்றன .இங்கு தனியார் பாடசாலைக் கல்வியானது மிகவும் செலவு மிக்கதாக அமைந்துள்ளது. குறிப்பாக தனியார் பாடசாலைகளில் பாடசாலைச் சீருடை அணிதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஆனால் அரச பாடசாலைகளில் பாடசாலைச் சீருடை அணிதல் பின்பற்றப்படுவதில்லை என்பது ஒரு முக்கிய அம்சமாகும்.

இவ்விரு வகைப் பாடசாலைகளையும் விட மூன்றாவது வகையாக வீட்டுப் பாடசாலை (Home school)என்ற முறைமை பின்பற்றப்படுகின்றது .வீட்டுப்பாடசாலை என்பது தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாமல் வீட்டில் வைத்தே பெற்றோரால் அல்லது தெரிவு செய்யப்பட்ட ஆசிரியரால் கல்வி வழங்கப்படும் முறையாகும். இம்முறையானது வட அமெரிக்காவில் நடைமுறையில் உள்ளது. இதனை விட அதிகமான பொது நலவாய நாடுகளிலும் இம்முறை பின்பற்றப்படுகின்றது.




SCHOOL BUS

பெரும்பாலான மக்கள் தனியார் பாடசாலைகளை விட அரச பாடசாலைகளிலே தமது பிள்கைள் கல்வி கற்பதை பெரிதும் விரும்புகின்றனர். ஏனெனில் மக்களின் வரிப் பணத்தில் பெரும்பாலான பணம் அருகாமையில் உள்ள பாடசாலைக்கு செலவிடப்படுகின்றது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இவ்வரிப்பணம் எவ்வாறு பாடசாலைக்கு செலவிடப்படுகின்றது என்ற விபரங்களை மக்களுக்கு எளிதில் புரியும் விதத்தில் தெரியப்படுத்தப்படுகின்றது. அத்துடன் அரச பாடசாலைகள் அனைத்து வசதிகளையும் கொண்டுள்ளது. குறிப்பாக மாணவர்களை பாடசாலைக்கு அழைத்துச் சென்று மீண்டும் வீட்டிற்கு கொண்டு வந்துவிடுவதற்கு பாடசாலை பேருந்துச் சேவை (school bus service) பொது போக்குவரத்துச் சேவையுள்ள இடங்களுக்கு மாணவர்களுக்கு இலவச பயணசீட்டு (Free Metro Card )வழங்குதல், மாணவர்களின் குடும்ப வருமானத்தினை அடிப்படையாகக் கொண்டு இலவசமாக காலை மற்றும் பகல் உணவு வழங்குதல் போன்றவற்றுடன் தரமான கல்வியினை இப்பாடசாலைகள் வழங்குகின்றன. இதனையும் தாண்டி அமெரிக்காவின் கல்வித் துறை மற்றும் உயர் பொறுப்பில் உள்ள அதிகாரிகள் கூட தங்கள் குழந்தைகளை அரச பாடசாலைகளிலேயே சேர்க்கின்றனர். இது இங்குள்ள கல்வியின் மேலும், கற்பித்தல் தரத்தின் மேலும் பெற்றோருக்கு உள்ள உச்சபட்ச நம்பிக்கையைக் காட்டுகின்றது.

தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியும் அரசியலும்

[பொறியாளன்]




ஈழத்தமிழர்களின் வாழ்வில் அரசியல் என்பது அப்பாற்பட்டதொன்றென எண்ணிய காலங்களை விடுதலைப் போராட்டம் ஏற்படுத்தியிருந்தது. ஏனெனில் போராட்ட காலங்களின் ஒவ்வொரு பத்தாண்டுகளையும் எடுத்து நோக்கினால் இதனைப் புரிந்து கொள்ள முடியும்.

ஈழவிடுதலைப் போராட்டமானது தனது முதலாவது பத்தாண்டுகளில் வளர்ச்சியடைவதற்கு தமிழ் தேசிய அரசியலே அடிப்படையாக அமைந்தது. "தமிழீழம்" என்ற வாரத்தையை முதன் முதலில் உச்சரித்தவர் ஈழ அரசியல்வாதியான திரு.வீ.நவரெட்ணம் அவர்கள். அதன்பின்னர் தமிழீழப் பிரகடனம் முதன் முதலில் 1974ம் ஆண்டு மே மாதம் 14ம் திகதி வட்டுக்கோட்டைப் பிரகடனமாக வெளியிடப்பட்டது.

வட்டுக்கோட்டைப் பிரகடனத்தைப் பின்பற்றி மூத்த தமிழ் அரசியல்வாதிகளின் தமிழீழத்தை நோக்கிய அரசியற் போராட்டமானது அவ்விலக்கு நோக்கி நகர்வதில் புற மற்றும் அகக் காரணிகள் தாக்கம் செலுத்தியதைத் தொடர்ந்து தமிழ் இளைஞர்கள் அத்தீர்மானத்தின் செயற்பாட்டு வடிவமாக அரசியல் போராட்டத்தைக் கைவிட்டு ஆயுதப் போராட்டத்தைக் கையிலெடுத்தனர். அந்நாளில் இருந்து தமிழரின் அரசியலானது போராட்ட அரசியலாகப் பரிணமித்தது. இப்பரிமாணம் இரண்டாவது பத்தாண்டுகளில் நிகழ்ந்த போது அப்போராட்ட அரசியலின் அடிநாதமாக தமிழீழம் விளங்கியதுடன் அந்நாதத்திற்கு சமரசமாக எதனையும் ஏற்றுக்கொள்ள போராட்டம் முன்வரவில்லை. அத்துடன் சமரசம் செய்ய முனைபவர்கள் விரட்டப்பட்டோ அல்லது கொல்லப்பட்டோ இருந்தனர்.

எனினும் இறுதிப்பத்தாண்டுகளில் ஆயுதப் போராட்டத்தின் அடிநாதமான "தமிழீழம்" என்பது உடனடியாக எட்டமுடியாது என்ற

**ஆயதப் போராட்ட மௌனிப்பின் பின்னரும் கூட தமிழரின் கல்வி, அரசியலைத் தவிர்த்ததால் ஏற்பட்ட சிதைப்பினைச் சரியாகப் புரிந்து கொள்ளத் தவறிய தமிழ்க் கல்விப் போதனையாளர்கள் அரசியலைக் கல்விப் புலத்திலிருந்து இருட்டடிப்புச் செய்தனர், செய்துவருகின்றனர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை தோற்றுவிக்கப்பட்டது. அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதல் நிகழ்ந்த பின் "பயங்கரவாதத்திற்கு எதிரான போர்" என்ற கோசத்தின் கீழ் உலகநாடுகளில் நடைபெற்ற போராட்டங்களிற் பெரும்பாலானவற்றை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க அமெரிக்கா தலைமையிலான அணிநாடுகள் முனைந்தமையே இதற்குக் காரணமானது. அதனால் "சமஷ்டி" என்பதை தமிழீழத்திற்கு மாற்றாகக் கொள்ள விடுதலைப் போராட்ட அமைப்பு தயாரானது. ஆனால் அந்த சமஷ்டியானது மேலிருந்து கீழ் நோக்கிய அதிகாரப் பகிர்வாகவன்றி கீழிருந்து மேல்நோக்கிய அதிகாரப் பகிர்வாக இருக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. அதனை ஏற்றுக்கொள்ள மறுத்த உலகம் தமிழரின் ஆயுதப் போராட்ட வலுவை முள்ளிவாய்க்காலில் தற்காலிகமாக மௌனிக்கச் செய்தது.

மேற்போந்த முப்பதாண்டு காலத் தமிழரின் அரசியற் பயணமானது தமிழரின் போராட்டமுறைக்கல்வி மூலமே சாத்தியமானது. அதனைச் சரியாகப் புரிந்து கொண்ட அடக்குமுறையாளர்கள் தமிழரின் போராட்டவியற் கல்வி முறையைச் சிதைப்பதனை நோக்கமாகக் கொண்டனர். அந் நோக்கத்தின் அடிப்படையில் அவர்கள் உருவாக்கிய வாசகம் தான் "கல்வி வேறு அரசியல் வேறு" என்பதாகும். இவ்வாசகத்தைத் தமிழரின் மனங்களில் பதிப்பதற்காக பேரினவாதிகளின் கொலைக்கரங்கள் அஞ்சவில்லை. கல்விப் புலத்திலிருந்து நியாயமான அரசியலைப் பேச எத்தனித்த கல்வியியலாளர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர். மாணவர்கள் கடத்தப்பட்டுக் காணாமலாக்கப்பட்டனர். அதே நேரம் இறுதிப் பத்தாண்டுகளில் தமிழரின் அரசியலைப் பேச வேண்டியவர்கள் விடுதலைப் புலிகளாகவே இருந்ததால் தமிழ் அரசியலைப் பேசியவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகள் என அடையாளப்படுத்தப்பட்டனர். இதனால் தமிழரின் கல்வி தானாகவே அரசியலைத் தவிர்க்க முனைந்தது. ஆயுதப் போராட்ட மௌனிப்பின் பின்னர் இச்சிதைப்பினைச் சரியாகப் புரிந்து கொள்ளத் தவறிய தமிழ்க் கல்விப் போதனையாளர்களும் அரசியலைக் கல்விப் புலத்திலிருந்து இருட்டடிப்புச் செய்தனர், செய்துவருகின்றனர்.

விடுதலை நோக்கிப் பயணிக்கும் ஒரு தேசிய இனத்தின் கல்வியானது விடுதலை அரசியலைத் தனது மூச்சாகக் கொண்டிருக்க வேண்டும். விடுதலை அரசியற் கல்வி என்பது அரசினால் நிர்ணயிக்கப்பட்ட கல்விப் பாடவிதானத்திலிருந்து வெளிச்சென்று கற்பிக்கும் முறையன்று. அப்பாடவிதானத்தின் ஊடாகவே விடுதலை அரசியலைத் தமிழ் மாணவர்களுக்கு கற்பிக்கக் கூடிய ஆற்றலைப் பெற்றுக்கொள்வது என்பதிலேயே தங்கியுள்ளது.

**வெறுமனேயொரு பதவிக்காகவும் அதன் மூலம் உழைக்கும் பணத்திற்காகவும் தான் கல்வியென்ற நிலை தோற்றுவிக்கப்படுகின்றது. சுதந்திரமான மன உணர்வுகளை உருவாக்கக்கூடிய கற்பித்தல் முறையொன்றின் ஊடாகவே தமிழ்த் தேசத்திற்கான அரசியல் முன்னநகர்த்தப்பட முடியும். அவ்வாறில்லாவிடில் அடிமைத்தனம்தான் உச்ச சுதந்திரம் என்று எண்ணும் இனமாகத் தமிழினம் உருவாக்கப்பட்டுவிடும்.**




"சிந்திப்போம் செயற்படுவோம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் நாடு கோட்டாறு மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி எரோணிமூஸ் அடிகளாருடனான நேர்காணல்

**அருட்தந்தை அவர்களே! தங்களை அலை ஓசை கலைக் குடும்பம் சார்பாக தங்களை நேர்காணலில் பெரு மகிழ்ச்சியடைகிறோம். தங்களைப் பற்றிய அறிமுகத்தை அலை ஓசை வாசகர்களுக்கு அறியத் தருவீர்களா?**



நான் தமிழ் நாட்டின் தென்பகுதி கோட்டாறு மாவட்டத்தைச் சேர்ந்தவன். நாற்பத்தொன்பது ஆண்டுகளாக மறை பணியாற்றிக் கொண்டு வரும் ஓர் அருட்பணியாளன். அநேகமாக 36 ஆண்டுகளுக்கு மேலாக குருத்துவப் பயிற்சிப் பணியில் தான் ஈடுபட்டு வருகிறேன். உங்களின் ஆயர் அவர்களும் எனது மாணவன் தான் முக்கியமான விவிலியம் பற்றிய விளக்கவுரை பற்றித்தான் எனது கற்பித்தல் தொடங்கியது. ஆது தவிர 5 ஆண்டுகள் பங்குத் தந்தையாகவும் பணியாற்றியுள்ளேன். தற்போது 100 படுக்கைகளைக் கொண்ட குழந்தைகளுக்கான மருத்துவ மனையை நிறுவி வசதி குறைந்த குழந்தைகளுக்கான தரமான மருத்துவ வசதியை வழங்குவதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றேன்.

**அருட்தந்தை அவர்களே! தாங்கள் வேதாகமத்தில் ஆழமான புலமைப் பெற்றுள்ளதாக அறிந்தோம் இதில் பாண்டித்தியம் பெறவதற்கான தூண்டுதல் எவ்வாறு ஏற்பட்டது?**

இரண்டு காரணங்களைச் சொல்லலாம். நான் குருத்துவக் கல்லூரியில் படித்த காலத்திலேயே அதாவது 1962 – 1968 வரை தூய பவுல் குருத்துவக் கல்லூரியில் இருந்தேன். அப்போது விவிலிய பாடத்தில் எனக்கு நாட்டம் எழுந்தது. அது தவிர நான் பணிக்கு அனுப்பபடுகின்ற போது தூய பவுல் குருத்துவக் கல்லூரிக்கே கற்பிக்க என்ன அனுப்பினார். அந்நேரத்தில் அவர்களின் தேவை ஒரு விவிலிய ஆசிரியனாக என்னைக் கொண்டுவரவேண்டி இருந்தது. இதனாலேயே இப்பகுதியை நான் தேர்ந்து கொண்டேன்.

**தாங்கள் எவ்வகையான பங்களிப்பை தாய்த் திருச்சபைக்கும் குறிப்பாகத் தமிழ் நாட்டுத் திருச்சபைக்கும் வழங்கியுள்ளீர்கள் அல்லது வழங்கி வருகின்றீர்கள் என்பதைக் கூறமுடியுமா?**

ஓரளவுக்கு கூற முடியம் குருக்களில் பெரும் பான்மையோர் எனது பயிற்சிக்குட்பட்டவர்கள். குருத்துவப் பயிற்சியில் விவிலியத்தில் அவர்களை ஆழப்படுத்தியுள்ளேன். குருவாக உருவாகின்ற காலத்திலேயே 2ம் வத்திக்கான் சங்க ஏடுகளைத் தமிழில் மொழிபெயர்த்து உரை எழுதிய குழுவின் இயக்குனராக, ஒருங்கிணைப்பாளராக செயற்பட்ட அனுபவம் எனக்குண்டு. அந்தப்படைப்பு அப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வளவு சிறப்பானதாக அமையவில்லை. எங்களுக்கு தெரிந்த அடிப்படையிலேயே செய்தோம். அதன் 4வது பதிப்பு இப்போது வெளிவந்துள்ளது. தொடர்ந்து பலரும் அதை வாங்கிப் படிக்கிறார்கள். அத்தோடு விவிலியத் துறையிலே பழைய ஏற்பாடு திருந்தது. பெங்களூரு பேராயர் அருளப்பாவோடு சேர்ந்து இன்னும் பலரும் இணைந்து தமிழ் நடையில் இருத்தி அதை மெருகேற்றினோம். பின்பு பொது மொழிபெயர்ப்பு வந்த போது அதில் நான் பொறுப்பாளராக இருந்து அதனுடைய இறுதி வடிவத்தைக் கொண்டு வந்தேன். மேலும் இந்த பொது மொழி பெயர்ப்பு வெளி வந்த போது சீர்திருத்தச் சபையாரும் கத்தோலிக்க சபையும் இணைந்து விளக்கவுரை எழுதத் தூண்டினர். 46 நூல்கள் கொண்டதாகவும் ஒவ்வொரு நூலும் 150 – 400 பக்கம் வரை உள்ள நூல்கள். அப்படித் தொகுத்த நூல்கள் 30 வெளிவந்தன. இன்னும் 16 நூல்கள் வெளிவர வேண்டும். நமது எழுத்தாளர்கள் பல வேலைகளுக்கிடையே விரைவாக எழுத முடியவில்லை. அத்துடன் கிளரேஷியன் பாதர்ஸ் சபையினர் கொம்யூனிட்டி பைபிள் என்ற திருச்சபை நூலை அடிப்படையாகக் கொண்டதாக தமிழில் ஒன்றை ஆக்கலாமே என்ற கருத்து வந்தது. அதை நான் ஏற்றுக் கொண்டு அதன் முதன்மைப் பணிப்பாளராக இருந்து விளக்கங்களோடு கூடிய நூலை வெளியிட்டேன்.

**தங்களது சுயமான அல்லது குழுவாக உருவாக்கி வெளி வந்த படைப்புக்களைப் பற்றி கூறமுடியுமா?**

நான் இதுவரை கூறப்பட்டதே இதற்கு விடையாக அமைந்துள்ளது. இந்த மொழி பெயர்ப்புக் குழுவில் நானும் ஒருவன். இந்த விளக்கவுரைகளுடன் கூடிய விவிலியமும் குழுவாகச் செய்தது தான். மற்றபடி நானாக செய்தது வேயாலான் நற்செய்தி விளக்கவுரை ஒத்தமே நற்செய்திகளின் ஒருங்கிணைப்பு என்ற நூலை வெளியிட்டோம். புதிய விவிலியம் வந்த போது அதற்குரிய விளக்கவுரை நூல் ஒன்றையும் வெளியிட்டேன்.

**ஆதிக் கிறிஸ்தவர்களுக்கு ஒடுக்கு முறைகள் அத்தோடு புறக்கணிப்புக்கள் ஏற்பட்ட வேளையிலே அநேக கிறிஸ்தவர்களுக்கு மத்தேயு நற்செய்தி ஓர் ஆறுதலாக இருந்தது. அது எவ்வாறு என்பதனை அறியலாமா?**

மத்தேயு நற்செய்திக்கு முன்னாலேயே மாற்கு நற்செய்தி இதற்கென்று எழுதப்பட்டது.

துன்புறுத்தப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு ஆறுதலைக் கொடுப்பதாக அந் நற்செய்தி எழுதப்பட்டது. துன்பத்தைப் புரிந்து கொள்ளாமல் துன்பத்தால் துவண்டுபோய் தங்கள் கிறிஸ்தவத்தை விட்டு விடலாமோ என்று தவித்த மக்களுக்கு "அப்படியல்ல துன்பம் கடவுளின் திட்டத்தில் ஒரு பகுதி அதை ஏற்றாக வேண்டும். கடவுளுடைய ஒரே மகனாகிய இயேசுவையே துன்பத்துக்குட்படுத்தித்தான் கடவுள் தன் திட்டத்தை நிறைவேற்றினார். நம்முடைய வாழ்க்கையிலும் வரும் துன்பம் தவிர்க்க முடியாதது" என்பதை மாற்கு கூறியுள்ளார். இப்பொழுது 2வது எழுதப்பட்ட மத்தேயுவும் இதே பாணியிலேயே யூதர்கள் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினார்கள். அவர்கள் 39 சாட்டையடி கொடுத்தார்கள். ஜெபக் கூடத்திலிருந்து புறம்பாக்கினார்கள்.

85ம் ஆண்டையொட்டி கிறிஸ்தவர்களைப் பிரித்து விட்டார்கள். அவர்களுக்கும் எங்களுக்கும் தொடர்பில்லை என்று விட்டார்கள். தமது ஜெபத்திலேயே கிறிஸ்தவர்கள் சபிக்கப்பட்டார்கள் என்று கூறிவிட்டார்கள். இவ்வேளையிலே மத்தேயு "**அப்படியல்ல நாம் கடவுளுடைய மக்கள். அவர்கள் வாழ வேண்டிய வழிமுறைகளை தெளிவாக குறிப்பிட்டார்**".

நன்றி அருட்தந்தை அவர்களே !

**நேர்கண்டவர்:**

**கிறிஸ்டி முருகுப்பிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணிலே மனுவுருவானார்



ஒளியொன்று கண்டோம் - அதில்
உறவொன்று கண்டோம் - அங்கே
உன்னதமும் கண்டோம்
கொண்டோம் மாமைந்தன்
பாரிலே வந்திட்டார் என்றோம் எமக்காக

வான்வெள்ளி வானிலே
வட்டமிட்டதைக் கண்டோம்
வானவர் கீதம் யாவரிலும்
ரீங்காரமீட்டக் கண்டோம்
கொண்டோம் கோமகன் இயேசு
பாரிலே வந்திட்டார் என்றோம் எமக்காக

காரிருள் கொடையென்றோம்
கன்னிமரி மடியென்றோம்
மாடடைக் கொட்டில் துணையென்றோம்
கொண்டோம் மாமைந்தன் யேசு
மண்ணிலே மனுவுருவானார் எமக்காக

மாந்தர் மனம் பண்ணிசைக்க
வேந்தன் மனம் கதிகலங்க
இடையர் மனம் ஆர்ப்பரிக்க
பாரிலே வந்திட்டார் என்றோம் எமக்காக

துணியும் தேவையில்லை
மாளிகையும் தேவையில்லை
மாந்தர் மனமே பொக்கிஷமாய்
கொண்டோம் விண்வேந்தன்
மண்ணிலே மனுவுருவானார் எமக்காக

**செல்வி. அஸ்வினி சதாசிவம்**
**பேராலயம்**

# நம்பிக்கை

**செல்வி. நிவேதா மகிழ்ராஜ்**



**பா**ரிஸ் நகரில் ஒரு வித்தியாசமான போட்டி நடைபெற்றது. அதிக நேரம் கைதட்டுவது யார் என்பதே அந்தப்போட்டி அரங்கம் நிறைந்த போட்டியாளர்கள்.. அரங்கமே அதிரும் ஆரவாரம்.. போட்டி ஆரம்பமாகியது.. ஒளி விளக்குகள் சுழன்று சுழன்று போட்டியாளர்களை வெளிச்சமாக்கிக் கொண்டிருந்தன.

உடன் கமராக்களும் போட்டியாளர்களை அடையாளம் கண்டு கொண்டிருந்தன. இறுதி வரையிலும் கரகோசம் எழுப்பியவரை இனங்கண்டு வெற்றியாளராக மேடைக்கு அழைத்தனர் ஏற்பாட்டாளர்கள். என்ன ஆச்சரியம்.. மேடையில் ஏறியது ஒருவரல்ல இருவர் .. ஒருவர் இடது கையையும் மற்றவருக்கு வலது கைமட்டுமே இருந்தன. மீண்டும் அரங்கம் கரகோச ஒலியால் அதிர்ந்தது. அவர்களின் நம்பிக்கையை ஏற்பாட்டாளர்கள் வியந்து பாராட்டினர். நம்பிக்கையுடன் வெற்றி பெற்றதைப் பற்றியல்ல.. நம்பிக்கையுடன் பங்கு பற்றியதையொட்டியே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரம் : AsiaNews / வத்திக்கான் வானொலி

# திருஅவைச் செய்திகள்



**செப்**.30,2017. புலம்பெயர்ந்தோர் மற்றும் குடிபெயர்வோர்க்கு ஆதரவாக, அகில உலக காரித்தாஸ் நிறுவனம், உலக அளவில் ஆரம்பித்துள்ள, 'பயணத்தைப் பகிர்வோம்' என்ற ஈராண்டு நடவடிக்கையில், அமெரிக்க ஐக்கிய நாட்டு ஆயர்கள், பங்களாதே' காரித்தாஸ் நிறுவனம் உட்பட பல்வேறு தலத்திருஅவைகள் இணைந்துள்ளன.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் இடம்பெறும் 'பயணத்தைப் பகிர்வோம்' நடவடிக்கைக்கு, அந்நாட்டு ஆயர் பேரவை, CRS எனப்படும் கத்தோலிக்க நிவாரணப் பணிகள் அமைப்பு, CCUSA எனப்படும் அமெரிக்க ஐக்கிய நாட்டு பிறரன்பு அமைப்புகள் ஆகியவை உதவி வருகின்றன.

நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் பணியாற்றும் CRS அமைப்பும், CCUSA அமைப்புகளும், அகில உலக காரித்தாஸ் நிறுவனத்தில் உறுப்புகளாக உள்ளன.

மேலும், மியான்மாரிலிருந்து ஏறக்குறைய ஐந்து இலட்சம் ரொஹிங்கியா மக்கள் பங்களாதேசில் அடைக்கலம் தேடியுள்ளவேளை, இம்மக்களுக்கும், குடிபெயர்வோர்க்கும் சிறப்பாக சேவையாற்றி வருகின்றது, பங்களாதேஷ் காரித்தாஸ் நிறுவனம்.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் புலம்பெயர்ந்தோருக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும், பங்களாதேஷ் நாட்டின் டாக்காவில், தன் பணிகளை ஆற்றி வருகின்றது, காரித்தாஸ் நிறுவனம்.



**செப்**.30,2017. 'இந்த நம் காலத்தில், கிறிஸ்தவர்களும், யூதர்களும், முஸ்லிம்களும், அமைதிக்காக மிக அதிகமாகச் செபிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது' என, இச்சனிக்கிழமையன்று, தன் டுவிட்டர் செய்தியில் கூறியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

மேலும், அக்டோபர் 01, ஞாயிறன்று, வட இத்தாலியிலுள்ள Cesena, பொலோஞ்ஞா ஆகிய இரு நகரங்களுக்கு, மேய்ப்புப்பணி பயணம் மேற்கொள்கிறார், திருத்தந்தை பிரான்சிஸ்.

திருத்தந்தை ஆறாம் பத்திநாதர் (பயஸ்) அவர்கள் பிறந்ததன் 300ம் ஆண்டு நிறைவையொட்டி, Cesenaவுக்கு இஞ்ஞாயிறு காலையில் மேய்ப்புப்பணி பயணம் மேற்கொள்ளும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பொலோஞ்ஞா உயர்மறைமாவட்டத்தில் இடம்பெறும், திருநற்கருணை மாநாட்டிலும் கலந்துகொள்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்பெண்ணா? மனித நேயமா?

அருட்சகோதரி றஞ்சினி HC,வெலிமடை

“உலகை நீங்கள் மாற்றி விடுவதற்க் கல்வி என்ற சக்தி வாய்ந்த ஆயுதத்தை விட வேறு சிறந்தது எதுவும் இல்லை” ஏன்ற நெல்சன் மண்டேலாவின் கூற்றிற்கு இணங்க ஒவ்வொரு மனிதனுக்கும் அவர்கள் வாழும் சமுதாயத்திற்கும் பயனுள்ள பல நடத்தை மாற்றங்களை உருவாக்குவது கல்வியாகும். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் புதைந்து கிடக்கும் திறமை என்னும் புதையலை வெளிக்கொண்டு வரும் சக்தி வாய்ந்த ஆயுதமும் கல்வியே.

“கேடில் விழுச்செல்வம் கல்வியொருவர்க்கு மாடல்ல மற்றவை யாவை” என்றார் திருவள்ளுவர். கல்வியை ஓடி வரும் வெள்ளத்தினாலும் அழிக்க முடியாது வெந்து சாம்பலாகும் நெருப்பாலும் மாற்ற முடியாது. கொடுக்க கொடுக்க நிறையுமே தவிர ஒரு போதும் குறையாது. கல்விச்செல்வத்தின் புகழ் காலத்தால் மாறாதது.காலத்தாலும், மொழியாலும், பண்பாலும் பழக்கவழக்கத்தாலும் மனிதனை உலகிற்கு அடையாளம் காட்டும். நற்கல்வி ஒன்றுதான் மனிதனை மனிதனுக்கு நிகராக அதிக்கும் பண்பை வளர்த்து நாட்டையும் வீட்டையும் வளமைப்படுத்தும்.

கடந்த 1990 களில் தகவல் தொழில்நுட்பப் புரட்சி உலகில் பல நாடுகளில் கல்வித்திட்டத்தை மறுசீரமைத்து தகவல் தொழில்துறை மிகவும் பிரமாண்டமாக வளர்ந்து அனைத்து துறைகளிலும் காலூன்றி இன்றியமை-யாத சக்தியாக தன்னை நிலைநிறுத்திக்கொண்டுள்ளது. கல்வித்துறையும் இதற்கு விதி விலக்கல்ல.

கல்வி என்றால் அது தகவல் தொழில்நுட்பம் சார்ந்ததாக இருந்தால் மட்டுமே சிறக்க முடியும் என்ற கருத்து இன்று எமது சமூகத்தில் வளர்ந்து வேரூன்றி இருப்பதும் சிந்திக்க வேண்டிய ஒரு விடயமாகும். மனித நேயம் அடிப்படை அறிவியல் கலைப்பண்பாடு சார்ந்த துறைகளில் இன்றைய மாணவ சமுகம் நாட்டம் காட்டுவது குறைந்து வருவதும் இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

தொழில்நுட்ப வளர்ச்சி தொடங்கி 27 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் சமுகத்திற்கும் மானிடத்திற்கும் கல்வித்துறை மூலமாக என்ன பயன் கிடைத்தது என்ற கேள்வியை இன்றைய கல்வி மான்கள் ஒவ்வொருவரும் கேட்கவேண்டி உள்ளது. கல்வித்துறை தன்னை மேம்படுத்திக்கொண்டதா? என்ற கேள்வியுடன் தொழில்நுட்ப வளர்ச்சியால் நாம் அடைந்த நன்மைகள் ஒரு புறம் இருந்தாலும் கல்வித்துறையும் இந்தத் தலைமுறையும் எதையோ இழந்து விட்ட என்ற உணர்வும் ஒரு வகையில் உண்மையே.

கல்விக்கூடங்கள் அரச சார்பற்ற பாடசாலைகள் இன்னும் அரச பாடசாலைகள் அனைத்தும் சுயநோக்கத்துடனேயே இயங்குகின்றன. உயர் மதிப்பெண்களைப் பெற்று மாணவர்கள் பாடசாலைக்கு பெருமை தேட வேண்டும் என்றும், மாணவர்கள் தாம் நல்ல பெறுபேறுகளைப் பெற்று உயர்நிலையை அடைந்து தொழில் புரிந்து பணம் தேடும் நோக்கங்கள் ஒரு புறம் இருக்க மனித நேயமும் கலைப்பண்பாடுகளும் பின்நோக்கிச் செல்வதும் நிச்சயமாக ஒரு நல்ல அடையாளம் அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்கல்வி வளர்ச்சியும் மதிப்பெண் பெறும் நோக்குடன் கொடுக்கப்படும் இன்றைய கல்வி முறையும் மதிப்புக்கல்வி வளர்ச்சியைக்குறைத்து விட்டது.பாடசாலைகளிலும்,பல்கலைக்கூடங்களிலும் ஆசிரியர்கள், அதிகாரிகளை அவமதிப்பதும்,வீடுகளில் தாய் தந்தையர் மீதுள்ள பாசமும், பெரியவர்கள் மூத்தோர் மீதான மதிப்பும் மரியாதையும் குறைந்து போவதும் மறுக்கப்படாத உண்மைகளே.

மறைந்து வரும் பண்டைய இலக்கியங்களில் புதைந்து கிடக்கும் சகோதரத்துவம் ,மனித நேயம்,ஒழுக்கம்,அன்பு அருள் போன்ற உயரிய சிந்தனைகள் தற்கால தலைமுறைக்கு சென்று அடையவேண்டிய காலம் கடந்து போய்க்கொண்டு இருக்கிறது.எந்தப்பாடத்தைக்கற்பித்தாலும்,ஏனைய திறன் வளர்ப்புப்பயிற்சி அளித்தாலும் அதனுடன் மனித நேயத்தையும் கற்பிக்க வேண்டும்.தான் விரும்பும் நன்மைகளை பிறருக்கு கொடுக்க விரும்புவதும்,தான் விரும்பாததை பிறருக்கு கொடுக்க விரும்பாமல் இருப்பதுமே மனித நேயமாகும்.இப்பண்பு இல்லாவிட்டால் மனிதன் மிருகத்ததை விட மோசமான நிலையை அடைவதை நம் அன்றாட வாழ்வில் அதிகமாக காண்கின்றோம்.

இறைவன் மனிதனுக்குப் பயன்படக்கூடிய உறுப்புக்களைத்தந்து உடலாக மட்டும் அவனைப் படைக்கவில்லை உலகம் இயங்க வேண்டும் என்பதற்காக உடலுடன் உள்ளத்தையும் உள்ளத்துக்குள் பல நல்ல குணங்களையும் சேர்த்தே உருவாக்கி உள்ளான். மேலும் அன்பையும் அருளையும் கொடுத்து நேசிக்கும் பண்பை கொண்டவனாக படைத்துள்ளான். மனிதன் மற்ற உயிர்களின் மீது அன்பு செலுத்தும் மனப்பக்குவம் தான் இன்னும் மனிதனை தன்நிலையிலிருந்து மாறாமல் மனிதனாகவே அடையாளப்படுத்துகின்றது. பிறர் துன்பத்தைக்கண்டு அவருக்கு உதவுவது, பிறருக்காக வாழுதல், இனம், மொழி வேறுபாடு கருதாது சமூகப்பண்போடு பழகுதல் யாவும் மனிதனின் மனித நேயத்தைக் காட்டுகின்றது.

இந்த கருத்துக்களையும் கல்வியோடு சேர்த்து ஒவ்வொரு மாணவனுக்கும் கற்றுக்கொடுப்பதனால் சக மாணவனோடும்,சமூகத்தில் மற்றவர்களோடும், வீட்டில் பெற்றோர் பெரியவர்களோடும் மனித தன்மையோடும், சகோதர தன்மையோடும் பழகும் பண்பைப்பெறுவான். குறிப்பாக 5-15 வயது வரையிலான குழந்தைகளுக்கு இதைப்போதிப்பதன் மூலம் சமுதாயத்திற்கு தேவையான நற்பண்புகளைக் கொண்ட மனிதர்களைக் கொடுக்கமுடியும். இன்றைய சமூகத்திற்கு அவசியம் தேவைப்படுவது மனித நேயம். மனித நேயத்தை சமூகம் என்றும் அங்கீகரிக்கும்.

தேர்வுகளிலும் சரி,பள்ளிகளில் நடைபெறும் இதர போட்டிகளிலும் சரி ஒவ்வொருவரும் வெற்றிபெற வேண்டும் என்ற முனைப்புடன் செயறட்டாலும் அவற்றில் முக்கியமாக கற்றுக்கொள்ள வேண்டியது வெற்றி தோல்விகளுக்கு சம நிலைவில் உள்ள சந்தோசம்தான். எதிர்பார்த்த மதிப்பெண் கிடைக்காவிட்டால் வாழ்க்கைகை மாய்த்துக்கொள்வது முறையா? மனித பண்புகள்தான் முக்கியமே தவிர மதிப்பெண்கள் அல்ல.

வீட்டிற்கும், சமூகத்திற்கும், நாட்டிற்கும் நற்பண்பு நிறைந்த ஒரு சிறந்த குடிமகனை, மகளை உருவாக்க வேண்டியது ஒவ்வொரு பெற்றோரினதும், ஆசிரியர்களினதும் கடமையாகும். மதிப்பெண்களுக்கு மட்டுமல்ல மனித நேய கல்விக்கும் முதலிடம் கொடுப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1. குருத்துவ வாழ்வின் ஜூபிலி விழா

திருகோணமலை மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலைய இயக்குனரும் கன்னியா கிறிஸ்து அரசர் ஆலயப்பங்குத் தந்தையுமான அருட்பணி. என்.சி.அருள்வரதன் அடிகளாரின் குருத்துவ வாழ்வின் இருபத்தைந்தாவது வருட நிறைவு விழா 2017.09.16 ம் திகதி கன்னியா பங்கில் வெகுசிறப்பாக நடைபெற்றது. ஆயர் அவர்கள் உட்பட, அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள் பங்கு மக்கள் என பலர் பங்குபற்றி இவ்விழாவைச் சிறப்பித்தார்கள்.





### 2. இரத்ததான நிகழ்வு

திருகோணமலை மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட " "இரத்ததான நிகழ்வு" கடந்த 2017.10.01ம் திகதி உவர்மலை குழந்தையேசு ஆலயத்தில் காலை 10.00 மணி தொடக்கம் பி.ப. 1.30 மணிவரை நடைபெற்றது. 30 இளைஞர் யுவதிகள் இரத்தான நிகழ்வில் பங்களிப்பை நல்கினர்.





### 3. கண்காட்சி

திருகோணமலை மறைமாவட்ட "மறைக்கல்வி நடுநிலையத்தினால்" "ஒழுங்கு செய்யப்பட்ட கண்காட்சியானது புனித ஜோசேப் வாஸ், தூய மத்தேயு நற்செய்தி, குடும்ப வாழ்வு" ஆகிய தொனிப்பொருளில் புனித மரியாள் பேராலய கலையரங்கில் கடந்த 2017.09.30 - 2017.10.01 வரை நடைபெற்றது. மறைமாவட்டத்திலிருந்து அனைத்துப் பங்குகளும் இக் கண்காட்சியில் பங்குபற்றியிருந்தன.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலை ஓசை ஏழின் புதிர் போட்டி முடிவுகள்.

ஆடி, ஆவணி, புரட்டாதி 2017 அலைஓசையில் வெளி வந்த தரம் 10, தரம் 11 இற்கான கத்தோலிக்க பாடப் புதிர்ப் போட்டிக்கான முடிவுகள். கிடைக்கப் பெற்ற விடைகளின் அடிப்படையில் சரியான விடை எழுதிய மாணவர்களில் இருந்து குலுக்கள் முறையில் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஸ்டசாலிகளின் பெயர் விபரம்.

**முதலாம் பரிசு:** செல்வன். பீ.கிரிஸாலன்
(6ம் கட்டை, பெரியகுளம்
சிலுவை மலை ஆலயம், சாம்பல்தீவுப்பங்கு)

**இரண்டாம் பரிசு:** செல்வன்.வே.ஜனதக்ஷன்
(இருதயபுரப் பங்கு)

**மூன்றாம் பரிசு:** செல்வி.ர.டிலானி ஒடிலியா (இருதயபுரப் பங்கு)

மேற்படி புதிர்ப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுப்பணமாக ரூ.300 உரிய பங்குத் தந்தையினூடாக அனுப்பி வைக்கப்படும். பங்கு பற்றியவர்களுக்கும், பரிசு பெற்றவர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.


### அலை ஓசையில் விளம்பரம் செய்ய....




தங்கள் வியாபார நிலையங்கள், திருமண வாழ்த்துக்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், ஞாபகார்த்த நினைவுகள் போன்ற எல்லா வகையான விளம்பரங்களையும் அலை ஓசையில் விளம்பரம் செய்யலாம்

| | | |
|---|---|---|
| பிற்பக்க முழுவண்ணப்படம் | ரூபா | 5000 |
| உட்பக்கம் (முழுப்பக்கம்) | ரூபா | 4000 |
| அரைப்பக்கம் | ரூபா | 2000 |
| காற்பக்கம் | ரூபா | 1000 |

தொடர்பு.
அலை ஓசை
17, அந்தோனியார் வீதி, திருகோணமலை
0776771119

*trincoalaiosai@gmail.com*
A|C NO; 79003336
(BANK OF CEYLON)




**சந்தேகப்பாப்பாவும்**
**சங்கேதத் தாத்தாவும்**

**ஆசிரியர் தினம் என்றால் என்ன தாத்தா?**

**அலுவலகங்களிலும் அலுவலகர்களாலும் மதிக்கப்படாத ஆசிரியர்கள் தங்களைத் தாங்களே தட்டிக் கொள்ளும் தினம் மகளே!**

அடுத்த நொடியும்
உயிர்வாழ்வோம்
என்ற நம்பிக்கையில் தான்
வெளிப்பட்ட காற்றை
மீண்டும் நுரையீரல்
நிறைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| பெயர் : | ........................................ |
| விலாசம் : | ........................................ |
| | ........................................ |
| பங்கு : | ........................................ |

தரம் -10 [௨௨ - ௫5]
தரம் - 11 [௨௨ - ௫5]

**பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

01. "இறைவனின் நடுநிலையாளர்" என்ற சுற்று மடலை எழுதியவர் ..........................

02. திருப்பலியின் இரு பிரதான பகுதிகள்
1.......................................... . 2..............................

03. இயேசுவின் உன்னத குருத்துவ செபம் திருவிவிலிய ............................................. நூலில்...................... ஆம் அதிகாரத்திலுள்ளது.

04. கடவுளை அப்பா, தந்தையே என அழைக்கும் உரிமை ............................ மூலம் எமக்கு கிடைக்கின்றது.

05. "நீயும் இந்த நாசரேத்து இயேசுவோடு இருந்தவன் தானே" என்பதில் "நீயும்" என்பது ............................ வைக் குறித்து நிற்கின்றது.

06. "குளோரியா" என்பது ........................................ பாடலாகும்.

07. கத்தோலிக்கர்கள் தியானத்தின் போது பயன்படுத்தும் நூல்
.......................................

08. கிறிஸ்து அரசராக எருசலேமுக்குள் சென்றதை நினைகூரும் நாள்
................................

09. திருப்புகழ்மாலையில் கட்டாயமாகப் பயன்படுத்தப்படும் திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டு நூல் ................................................

10. இறந்தவர்களுக்கான திருப்பலியின் போது ................................... நிறம் பயன்படுத்தப்படுகின்றது.

11. போர்த்துக்கல் நாட்டின், பாத்திமா நகரில் மரியன்னை காட்சி அளித்த 3 சிறுவர்களின் பெயர்கள் 1.................... 2.......................... 3..........................

12. ............................ நற்செய்தி வாசகங்கள் திருவழிபாட்டு ஆண்டின் தவக்காலத்திலும், பாஸ்கா காலத்திலும் பயன்படுத்தப்படுகின்றன.

இப்போட்டிக்குரிய விடைகளை திருப்பி அனுப்ப வேண்டிய இறுதித் திகதி - 2017.11.15
சரியான விடைகளிலிருந்து தெரிவுசெய்யப்படும் மூவருக்கு தலா ரூ300 பரிசாக வழங்கி வைக்கப்படும்.

தொகுப்பு : திருமதி. ஜெயவதனி மரியதாஸ்

விடை அனுப்ப வேண்டிய முகவரி :

**ஆசிரியர், அலைஓசை**
**இல 17, புனித அந்தோனியார் வீதி, திருகோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய நடனப் போட்டியின் "கிளிக்ஸ்"













அலை ஓசை கலைத்
தொடர்பகத்தினால்
கடந்த 23.09.2017
அன்று பேராலய
கலை அரங்கில்
நடாத்தப்பட்ட கிராமிய
நடனப் போட்டியில்
பங்கேற்ற
அனைவருக்கும்
வாழ்த்துக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org